# தொண்டன்

ஆனி - 1988 4-50

தரமான கலை இலக்கியம் ஆழ்ந்த ஆன்மீக மாற்றத்தையே விளைவித்து விடும்...

பொறுப்பற்ற கணவன்மாரினுல் பெண்கள் படும் துன்பங்கள் கணக் கற்றவை...

காந்தி ஏன் அழுகிருர் ?

நடுவு நிலைமை தவறினுல் தலத் திருச்சபையினுள் பிளவு ஏற்படவே செய்யும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

ஆனி - 1988

மலர்: 20 இதழ்: 04

★★★

ஆசிரியர் :
பீ. ஜோசப்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
எஸ். லோகநாதன்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்.

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

உள்ளே . . .

1. உங்களோடு கொஞ்சம் ... 1
2. ஒரு பிரிவு உறுத்துகிறது .. 2
3. 2ம் அருள் சின்னப்பர் ... 3
4. காந்தி அழுகின்றார் ... பொது நிலையினர் செயற்... 6
5. இறைவன்முன் ஆண்களு... 7
6. சுவைக்கச் சில துளிகள்... 9
7. இளைஞர் அரங்கம் ... 10
8. தொடர் கதை ... 13
9. கத்தோலிக்க திருச்சபை... 16
10. தொண்டன் வளர ... 19
11. மனித மேம்பாடும் ... 21
12. மாணவர் பக்கம் ... 24
13. விவிலியப் புதிர் - 1 ... 27

**எழுதுங்கள் !**

கிறீத்தவ - சமூகச் சிந்தனைகளைக் கொண்ட ஆக்கங்களைத் தொண்டன் எதிர்பார்க்கின்றான்,

புதிய சிந்தனைகளுக்கு - புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறான்.

எழுதுங்கள் ! ஏற்றவையாயின் பிரசுரிப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்களோடு கொஞ்சம்....

இரு அரச குமாரர்கள்
இருவரும் சகோதரர்கள்
ஒருவன் சேரன் செங்குட்டுவன்
மற்றவன் இளங்கோ
இருவரும் ஒரு பெண்ணுக்காக கோயில் கட்டுகிறார்கள்
இருவர் உள்ளத்தையும் கவர்ந்த பெண்தான் கண்ணகி
சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கல்லால் ஒரு கோயில் அமைத்தான்
இளங்கோ கண்ணகிக்கு சொல்லால் ஒரு காவியம் படைத்தான்
சேரன் கட்டிய கோயில் இன்று சிதைந்து விட்டது
இளங்கோ அமைத்த கோயில் எல்லார் உள்ளங்களையும் கவர்ந்து நிற்கின்றது.
"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்
மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்று
சிலப்பதிகாரம் என்ற முத்தமிழ்க் காப்பியத்தைப் போற்றுகின்றார் பாரதி
பாட்டுக்கொரு புலவன் என்று போற்றப்படும் பாரதியும் ஒரு கலைஞன்தான்
பாரதி போற்றும் இளங்கோவும் ஒரு கலைஞன்தான்.
நானும் நீயும் கலைஞர்களாக முடியாதா? முடியும்.
யார் ஒரு கலைஞன்?
தான் அனுபவித்தவற்றை, தான் சிந்திப்பவற்றை தன் உள்ளத்தில் கருவுற்று
உருவாகிப் பிறப்பதை உலகிற்கு எடுத்துச் சொல்பவன்தான் கலைஞன்.
அவன் அதனை ஒரு சாதனம் மூலம் படைக்கின்றான்.
அது கல்லாகவும், சொல்லாகவும், மண்ணாகவும், மரமாகவும், தாளாகவும் இருக்கலாம்.
கலையைப் படைப்பதற்கு சிந்தனை மட்டும் போதாது.
அதனை வெளியிடவும் தெரிய வேண்டும்.
"கற்பனையும், சிருஷ்டி சக்தியும் கூடிப் பிறக்கும் குழந்தைதான் கலையாயிருக்க முடியும்"
என்கிறார் ஓர் அறிஞர்.

நம் மத்தியிலும் பல கலைஞர்கள் உருவாக வேண்டும். கல்லாலும் மண்ணாலும் கலைப்படைப்புக்களை ஆக்கும் திறனற்றவர்களாக இருந்தாலும் சொல்லால் பல விந்தைகளைச் செய்ய முடியும் அல்லவா! இதோ, தொண்டன் உங்களுக்குப் பணி புரிவதே தன் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளான். உங்கள் ஆக்கமுள்ள படைப்புக்களை தொண்டனுக்கு எழுதி அனுப்புங்கள்.

நீங்களும் ஏன் ஒரு கலைஞனாக முடியாது?

-- பி. ஜோசப்.




நீதி தண்ணீரைப்போல் வழிந்தோடட்டும்
நேர்மை நீரோடைபோல் பாயட்டும்.

ஆமோஸ் 5/24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒரு பிரிவு உறுத்துகிறது...!

கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொண்டன் சஞ்சிகையின் ஆசிரியராகவும், திரு/மட். மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தின் இயக்குனராகவும் பணியாற்றிய அருள் திரு, சி, பி, இராஜேந்திரம் அவர்கள் தமது பணியிலிருந்து விடுபட்டுள்ளார். அன்னார் ஆற்றிய அரும்பணிக்காக எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வீழ்ந்து, எழுந்து, ஓடிந்து, ஒழுங்கற்றுக் கிடந்த தொண்டன் சஞ்சிகை, இவர் காலத்திலேயே ஒழுங்காகவும், கட்டமைப்புடனும், ஈழத்து இலக்கிய உலகம் இனங்கண்டு குறித்துக் கொள்ளும் அளவுக்கு வெளிவரத் தொடங்கியது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளுவர். தொண்டனின் நீண்ட எதிர் காலத்துக்கு இவர் வகுத்த திட்டங்கள் பலனளிக்கு முன்பே இவர் எம்மை விட்டுப் பிரிந்து செல்வது எமக்கெல்லாம் மிகுந்த வேதனையை அளிக்கிறது.

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் சமூகத்தொடர்புத் துறைக்கென ஒரு நிலையம் உருவாகவும், வளரவும் பாடுபட்டவர் அருள்திரு. சி. பி. மறை மாவட்ட அளவில் ஒலிப்பதிவு நிலையம் ஒன்றுக்காக திரு./மட். மறைமாவட்ட ஆயர் திட்டமிட்ட பொழுது அதைச் செயலாக்க முன்னின்று உழைத்தார். பலருக்கு அது ஒரு பழங் கட்டடமாகவும், குறைகள் உள்ளதாகவும் தெரிந்தாலும் அதை உருவாக்கப்பட்ட நோவுகள், சிரமங்கள் உடனிருந்தவர்களுக்குத் தெரியும். இன்று இங்கு ஒலிப்பதிவு செய்யப்படும் கத்தோலிக்க தமிழ் வானொலி நிகழ்ச்சிகளைத் தரமான ஒலிப்பதிவாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஏற்று ஒலிபரப்புகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



தம்மோடு உடன் உழைத்தவர்களில் நம்பிக்கை வைத்து சுதந்திரமாக இயங்க விட்ட அந்தப் பெரிய மனம் யாருக்கு வரும்.!

அவர்களது எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பு ஒழுங்குகளைச்செய்த பண்பாளர் அவர்.

சாதனைப் பட்டியலை அவர் பெருக்காவிட்டாலும் திரு./மட். மறை மாவட்டத்தில் சமூகத் தொடர்புத் துறைக்கு உறுதியான அத்திவாரமிட்டுள்ளார் என்று தயக்கமின்றிச் சொல்லலாம்.

நிலையப் பணியிலிருந்து அவர் விடுபட்டாலும் சமூகத் தொடர்புத் துறைக்கு மேலும் பணி பல ஆற்றி சாதனைகள் படைக்க வாழ்த்துகிறோம்.

தற்சமயம் நிலைய இயக்குனராகவும், தொண்டன் ஆசிரியராகவும் தற்காலிகமாகப் பொறுப்பேற்றிருக்கும் அருள்திரு. பி,ஜோசப் அவர்களை அன்போடு வரவேற்கிறோம்.□

**எம். வி.**

★ ''என்ன பட்டாசு விட்டு விட்டு வெடிக்குது?''

''தவணை முறையில் வாங்கினதா இருக்கும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் 22வது உலகத்தொடர்பு தினத்தையொட்டி விடுத்த செய்தி...!

**கடந்த மே மாதம் 15ம் திகதி 22வது உலகத் தொடர்பு தினமாகும். இதையொட்டித் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் விடுத்திருந்த செய்தியின் சுருங்கிய வடிவத்தை வாசக நேயர்களுக்குத் தொகுத்துத் தருகின்றோம்.**

சகோதர சகோதரிகளே,
எனதருமை சிநேகிதர்களே,
இளைஞர்களே:

22வது உலகத் தொடர்புகள் தினமாகிய இன்று, நாம் அனைவரும் ஒருமைப் பாட்டிற்காகத் தொடர்புகள் ஏற்படுத்தும் போது மனிதர்களோடு நேசம் கொள்வதின் உண்மை எதிரொலிக்கிறது.

நான் மனித சிநேகத்தைப் பற்றிப் பேசும் போது அதன் வலியுறுத்தப்பட்ட கருத்தையே வெளிப்படுத்துகிறேன். எமது சகோதரர்கள் பலரின் முன் தோன்றியவர் கிறீஸ்துவே. அவர் வழங்கும் உண்மையான அன்பு உலகுக்கு அவர் காட்டும் தத்துவமாகும். அதே தத்துவத்தின் மூலம் பல அருட்கொடைகளைச் செய்தார்.

ஒருமைப் பாட்டிற்கும், சகோதரத்துவத்திற்கும் உள்ள உட்கருத்து கிறீத்தவ நோக்கத்துடன் மக்களின் இரசிப்புக்கு ஏற்ப எடுத்துக் கூறப்படவில்லை என்பதை நான் முதலில் கூறி வைக்க விரும்புகிறேன்.

சகோதரத்துவமும், ஒருமைப்பாடும் எங்களது காலத்தின் மிகவும் முக்கியமான மனித கலாசாரத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்திக்காட்டும் அடையாளமாகும்,

மனிதனுடைய கலாச்சாரம் அவனைப் பின்னிப் பிணைந்து கிடக்கும் அதி உயர்ந்ததும்

---

**வழக்கறிஞர்**

எந்த வழக்கறிஞனும் ஒரு புத்தக வாசகத்தை மேற்கோள் காட்டுவானே தவிர, அந்தப் புத்தகத்தைப் படித்திருப்பதில்லை.

- ஐட்ஜி பேக்கன்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெறுமதி வாய்ந்ததுமான வெளிக்காட்டலாகும். அதே நேரத்தில் மனிதனுக்கும் அவனது கலாச்சாரத்துக்கும் இடையில் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளால் தொடர்புகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதை இணைப்பாளர்களாகிய நீங்கள் அறிவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஒருவனது தற்புகழ்ச்சியும், மற்றவரை அவமதிப்பதும், அவர்களை விலக்கி நடப்பதும், உணர்ச்சி வசப்படுத்தி பிரித்து வைப்பதும். இந்த மாதிரியான மனப்போக்கால் பலாத்காரம் தலைவிரித்தாடவும் பிழையான வழிகளைத் தேடிப்போகவும் வழி ஏற்படும்போது, சகோதரத்துவம் சாதிக்க முடியாத காரியமாகி உண்மையான தொடர்பு அழிக்கப்பட்டுவிடுகிறது.

அடிப்படைத் தகைமைகளும், அதன் உள் நோக்கமும் அங்கீகரிக்கப்படும்போது கிறீத்தவ பரிமாணங்கள் மிகவும் ஐக்கியப்பட்டு, சகோதரத்துவமும், மனித ஒருமைப்பாடும் உலகில் நடைமுறைப்படுத்தும் சாத்தியம் ஏற்படும்.

தகவல் சாதனங்களின் தொழில் நுணுக்கங்களைத் தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திப் பின்வரும் அடிப்படைத் தகுதிகள் சிலவற்றையாவது வசதியாகப் பயன்படுத்தலாம் என அறிவுரை செய்ய விரும்புகிறேன்.

- சரியானதும் பக்கசார்பற்றதுமான தகவல்களைத் தகவல் முகவர்கள் மற்றவர்களுக்கு வழங்க முன்வர வேண்டும்.

- வானொலியின் தனித்துவத் தன்மையினால் மக்கள் மத்தியில் தகவல் பரிமாற்றம் வசதியாக மேம்படுத்தப்படல் வேண்டும்.

- குரல் கொடுக்கும் வல்லமை இழந்தவர்களுக்குக் குரல் கொடுக்கும் சக்தியை நீதியாக வழங்கும் பொருட்டு தகவல் சாதனங்களைப் பயன்படுத்தி அப்படியான அழைப்புக்களுக்குக் குரல் கொடுக்க வேண்டும்.

- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்று வரையறையற்று சகல துறைகளிலும் பெரிதும் பரவலாகப் பயன்படுவதால், அவை எங்கும், எதிலும், எவரிலும் ஒன்றிணைந்து ஊடுருவிச் செல்வதால் தனிமனிதனும் சமூகங்களும் பொறுமை இழந்து தீவிரத்தில் ஈடுபடாமல் மனித ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

---

**பைத்தியம் 1 -**
எதுக்காக இங்கே வந்தே?

**பைத்தியம் 2 -**
மரத்துக்கிளையில் ஏறிப் பழத்தைப் பறிச்சு தின்னுட்டு கொட்டையைத் தெருவில் போனவன்மேல் அடிச்சேன்னு சொன்னேன். 'அட்மிட்' பண்ணிட்டாங்க!

**பைத்தியம் 1 -**
என்ன மரம்?

**பைத்தியம் 2 -**
வாழைமரம்.

---

- தனி மனித தொடர்புச் சாதனங்களான தொலைபேசி தந்தி முதலியன விசாலமாக விரிவடைந்து செயற்கைக் கோள்கள் மூலமாக உலகளாவிய வகையில் ஈடுபடுவதால் கருத்தாழமுள்ள சமத்துவத்தை மனிதனுக்கு வழங்க பெரிய அளவில் வசதி செய்யப்படவேண்டும்.

- பழங்காலத்தில் நம்பவே முடியாதது என்றதுபோய், இன்று தகவல்களைச் சேகரித்து வைக்கக்கூடிய வகையில்பொருளாதார - கலாச்சார நடவடிக்கைகளின் தகவல்கள் அதிகரித்து வரும் வேளையில் பல்வேறுபட்ட தகவல்களைச் சேகரித்து வழங்க தகவல் வங்கிகூட சேவையில் உள்ளதால் நவீன வசதிகளைப் பயன்படுத்தி ஓர் உண்மையான முன் நிபந்தனையாக இத்தகவல் பரிமாற்ற முகாமைத்துவம் பயன்பட வேண்டும்.

- விளம்பரம் செய்தவன் மூலம் வாய்ப்புக்களைத் தட்டி எழுப்பவும், விருப்புக்களை விருத்தி செய்யவும், தேவைகளை அதிகரிக்கவும், அதை இயக்குபவர்களுக்குக் கிட்ட முடியாமல் இருந்த நன்மைகள் தொடர்புகள் மூலம் விழிப்படையவும் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவலாளர்கள் தமக்குள் ஓர் ஒழுங்கார்ந்த வழியைக் கடைபிடித்து மனிதனையும், மனித குலத்தையும் பற்றிய உண்மைகளை, தகவல்களுக்கும் தொடர்புகளுக்கும் வழங்கி சரியான நிலைப்பாட்டை ஏற்படுத்துவது அவசியமாகும்.

கிறீஸ்தவர்கள் மனித சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் கிறீஸ்துவில் கடவுள் ஜீவிக்கிறார் என்பதை, விளக்கமாகவும். விரிவாகவும் விளங்கப்படுத்த வேண்டும்.

திருச்சபை மூன்றாவது சுபீட்ச காலத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சகோதரத்துவத்தையும், ஒருமைப்பாட்டையும் நினைவுபடுத்தும் வேளையில், அது ஒரு வாழ்க்கையின் தத்துவம் அல்ல என்பதையும் பகருகின்றது. அவை சுதந்திரமாக உணரப்பட வேண்டிய சமூகத் தொடர்பின் பயிற்சியின் குரலெனவும் வலியுறுத்துகிறது.


நம்பினோருக்கு நற்கருணைகிட்டும். சகோதரத்துவமும் ஒருமைப்பாடும் உலகத்தின் நம்பிக்கையின் வழியால் அச்சமும் அகற்றப்பட்டு ஆத்ம திருப்திகள் மூலம் தொடர்புகள் கட்டி எழுப்பப்படும்போது மகிழ்ச்சி உண்டாகும்.

தொடர்புகளின் கொடையால், சகலராலும் கட்டியெழுப்பப்படும் இந்த ஐக்கியப்பட்ட சகோதரத் தூண்டலால் அளவுகடந்த உற்சாகத்தைப் பெறுகிறோம்.

அதி உயர்ந்த ஆசீர்வாதத்தையும் ஒவ்வொருவருக்கும் வழங்குகிறேன்.

**- தமிழாக்கம்: மட்டூர் ராம்.**

---



**ஆசிரியர் :**
ஔவையின் (புது)முதுமொழி
ஒன்று கூறுக ?

**மாணவன் :**
அரிது அரிது பிறத்தல் அரிது
மனிதனாய் பிறத்தல் அரிது -
அதிலும் தமிழனாய்ப் பிறத்தல்
அரிது - பிறந்து விட்டால்
கூன், முடம், குருடு, செவிடு
இல்லாமல் இருப்பது அரிது.

ஓ. கே.

★ புனிதமற்ற மனிதர்கள் அதிகாரம் செலுத்தும் போது கௌரவமான பதவிகள் தனி உடைமையாகிவிடுகின்றன.

- ஷேக்ஸ்பியர்

## அன்பு

உலகில் எல்லாவிதமாகவும் கூட்டிக்கழித்துப் பார்த்தால் இரண்டு வகையான அன்பு உண்டு.

(1) யார் மேல் அன்பு செய்ய விரும்புகிறோமோ அவரையே ஆள விரும்புகிற அன்பு ஒன்று.

(2) யார் மேல் அன்பு செய்ய விரும்புகிறோமோ அவருக்கே ஆட்படுகின்ற அன்பு ஒன்று.

ஆள விரும்புகிற அன்பைக்காட்டிலும் ஆட்படுகின்ற அன்பு மிகவும் பக்குவமானது.

ஆள விரும்புகிற அன்பில் சுயநலமும் அகங்காரமும் உண்டு.

ஆட்பட விரும்புகின்ற அன்பில் தியாகத்தை தவிர வேறெதுவுமே இல்லை.

ஆள விரும்புகிற அன்புக்கு உலகில் காதல் என்றும், பிரேமை என்றும் விதம் விதமாகப் பெயர் சொல்லுகிறார்கள்.

ஆட்படுகின்ற அன்புக்கு பக்தி என்று பெயர் சொல்லுகிறார்கள்,

பரிசுத்தமான அன்பு என்பது - மனம் நெகிழ்ந்து உருகும் தூயவர்களின் கண்ணீரால் இவ்வுலகில் நிரூபிக்கப்படுகிறது. (நூல் : பொன்விலங்கு)

- தொகுப்பு : மெடோனா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொது நிலையீர் செயற்படுவீர்

( தமிழ்ச்செல்வன் மாசிலாமணி )

திருச்சபைக்குப் பொதுநிலையோர் தலையே ஆகும்
செப்புகிறுர் திருத்தந்தை இதையே பாரும்!
அருஞ்சபையை அகிலத்தில் வளர்த்துக் காக்க,
ஆண்டவரும் பொதுநிலையோர்க்(கு) கருணைசெய்வா
ஒருசபையே உருவானேன் செய்த பணியை [ர்
உலகோர்க்குத் தினமாற்றும் உண்மைச் சபையாம்!
மருவில்லா திருச்சபையை வளர்ப்ப தற்கு
மாநிலத்து பொதுநிலையீர் திரண்டெ ழுவீர்!

உடலொன்று உறுப்புக்களோ பலவே யாகும்
ஒவ்வொன்றும் தன்பணியைச் செய்தே தீரும்!
கடலான திருச்சபையோ தலையே ஆகும்
கவனமுடன் பணிபுரிவோர் உறுப்பே யாகும்!
திடமுடனே திருச்சபையை வழிந டத்தும்
திருத்தந்தை தலையாகும் - தொடரும் ஆயர்
கடமையுடன் பணியாற்றும் குருக்கள் துறவர்
கன்னியர்கள் மட்டுமல்ல திருச்சபையோர்!

மறைஉடலில் பொதுநிலையோர் பேருறுப்பாம்
மனமொன்றி தினம்காக்கும் மேலோ ராகும்
இறைமகனர் தந்தபெரும் சேவை தன்னை
இவ்வுலகில் செய்திடவே தகுதி யானோர்
மறைபரப்பு பணியினிலும் மறைபோ திக்கும்
மாபெரிய பணியினிலும் பங்கு கொண்டோர்!
இறையரசின் பெருவிருந்தை அருந்து தற்கு
ஏற்புடைய ராகதினம் செயற் படுவீர்!

# காந்தி அழுகின்ருர்!

உண்ணு விரதத்தால் உயர்வான அறப்போரால்
உரிமையினை வென்றெடுத்த
உத்தமராம் காந்தி மகான்
கண்ணீர் வடிக்கின்ருர்! கதறியழுகின்ருர்!
'' காந்தி '' யெனும் தன்நாமம்
கறைபட்டுப் போனதெண்ணி
மண்ணுளும் ஆசையினை மமதையினை மனத்துள்ளே
வளர்த்து நித மிங்கு
வாழ்கின்ற '' பேரை '' யெண்ணி
விண்ணேறிப் போயங்கு வீற்றிருக்கும் குணசீலன்!
விம்மிப் பொருமி நெஞ்சு
வெடித்திடவே அழுகின்ருர்!

சாந்தி சமாதானம் சமைத்துத் தருவோ மென்றே
தரணிக் குரைத்தவர்கள்
சதிபுரியும் காட்சிகண்டு
ஏந்தி முழு நோன்பை இருந்த அன்னையர்க்கு
இரங்கும் நிலை மறந்து
இழித்துப் பழித்த தெண்ணி
காந்தி மதித்த வந்தக் கண்போன்ற தாய்க்குலத்
காலால் மிதித்திங்கு [தை
கசக்கி முகர்தல் கண்டு
வேந்து! அறப்புரட்சி விளங்க வைத்த மகான்
விண்ணில் இருந்து செந்நீர்
விழியால் பெய்கின்ருர்!

நிலாதமிழின் தாசன்
நிலாவெளி - 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

8ம் பக்க தொடர்ச்சி..

களைப் பெற்று வளர்க்கச் சக்தியற்றவர்களாய்க் கருச்சிதைவு செய்யும் பெண்களின் நிலை என்ன? தங்கள் வாழ்க்கை சாதகமாக அமையாத காரணத்தினால் விலைமாதர்களாக மாறி இழி நிலையில் வாழ்ந்து வரும் பெண்களையும் எம் சமுதாயத்தில் காண்கின்றோம். அன்பினால் பிணைக்கப்பட்டு வாழ வேண்டியவர்கள் அன்பைக் கண்டடையாது கலங்கி ஏங்கி நிற்கிறார்கள்.

இவ்வாறாக நாம் பார்த்துக்கொண்டே போவோமானால் எம் சமுதாயத்தில் இன்னும் எண்ணற்ற பிரச்சினைகள் சிக்கல்களைக் காண முடிகிறது. இவ்வனைத்துப் பிரச்சினைகளாலும் பெண்கள் பாதிப்படைகிறார்கள். அவர்களில் ஏற்படும் உணர்வுகள் வாழ்க்கையில் ஈடுபாடில்லை. தாழ்வு மனப்பான்மை உருவாகிறது. வாழ்க்கையில் வெறுப்பு விரக்தி கொண்டவர்களாக மாறுகிறார்கள், உடல் நலம் குன்றுகிறது. படைக்கும் ஆற்றல் கற்பனைத் திறன் ஆகியவை குன்றி விடுகின்றன. அனைத்துக்கும் 'ஆமா' போடும் பெண்களாக மாறுகிறார்கள்.

இப்படியாகப் படைப்பின் நோக்கம் மாறுபட்டுச் சீர்குலைந்த நிலையில் எம் சமுதாயம் வாழ்ந்து கொண்டு வருகிறது. பெண்கள் படைக்கப்பட்டதன் நோக்கத்தை ஆண்கள் உணர வேண்டும். அன்பினால் பிணைக்கப்பட வேண்டும். இறைவன் முன் தாம் கொடுத்த உடன்படிக்கைக்கு ஏற்ப வாழ்க்கை நடத்த முயல வேண்டும். இறைவன் முன்னிலையில் இருவரும் சரிநிகர் என்ற மனநிலையோடு தூய்மையான அன்பு, மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு வாழ இறைவன் நம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார், என்ற உணர்வோடு வாழ்வோமாக.□

## வாயாடி வண்டுமணி

வேலையில்ல வேலையில்லன்னு பல பேரு அலையிறாங்க. வெளி நாடுகளுக்குப் போறாங்க. மூளைகெட்ட பசங்க! ஏங்க! ஒரு சவப்பெட்டிக் கடை போடக்கூடாது? நம்ம நாட்டில இப்போ இது தானுங்க ரொம்ப 'கிராக்கி' யான தொழிலு.



## விண்ணக வாழ்வின் நான்காவது நினைவஞ்சலி

உயிர்ப்பும் உயிரும் நானே; என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வான் - யேசு. (அரு, 11; 25)

# திருமதி மேரி கருணையம்மா வாஸ்

மண்ணில்: 06-02-1921. ★★★★ விண்ணில்: 25-06-1984.

அந்நாரின் ஆத்ம சாந்திக்காக மட்டக்களப்பு தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா தேவாலயத்தில் ஆனி மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 05-00 மணிக்குத் திவ்விய பலி பூசை ஒப்புக்கொடுக்கப்படும். உறவினர், அன்பர்கள் தயவு கூர்ந்து இத் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு பணிவுடன் அழைக்கின்றோம் -

31/1, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

கணவன், மக்கள், மருமக்கள், பேரர்
உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவன் முன்

## ஆண்களும் பெண்களும் சரி நிகர்.

"மனிதன் தனியாய் இருப்பது நல்லதன்று" மற்றெல்லாவற்றையும் கடவுள் நல்லதெனக் கண்டார். ஆதாம், இவள் என் எலும்புகளின் எலும்பும் மாமிசத்தின் மாமிசமுமாய் இருக்கிறாள். இவள் மனிதனிடத்தினின்று எடுக்கப்பட்டவளாதலால் மனுஷி எனப்படுவாள். பெண் தனக்கேற்ற துணையென்றும் இயல்பையொத்தவள் என்றும் அறிந்து ஆதாம் மகிழ்கிறான். இது ஆதி. 2 அதிகாரம் 23ம் வசனத்தில் எதிரொலிக்கிறது.
ஆதி. 2 அதிகாரம் 22ம் வசனம்

ஆண்டவராகிய கடவுள் ஆதாமிடமிருந்து எடுத்த விலாவெலும்பை ஒரு பெண்ணாகச் செய்தார். அந்தப் பெண்ணை ஆதாமிடம் அழைத்துக்கொண்டு வந்தார். விலாவிலிருந்து படைக்கப் பட்டதால் இருவரும் அன்பால் பிணைக்கப்பட்டவர்கள். இறைவனின் சரி நிகரானவர்கள். அவனுடைய தலையிலிருந்து எடுக்கப்படவில்லை. அப்படி இருந்தால் அவனால் ஆளப்படுவாள். அவனுடைய காலிலிருந்து எடுக்கப்படவில்லை. அப்படி இருந்தால் அவள் நசுக்கப்படுவாள். மாறாக அவனுடைய பக்கத்திலிருந்து எடுக்கப்பட்டாள். அவனோடு நடந்து செல்ல, அவனுடைய தோளுக்குக் கீழிருந்து அவனால் பாதுகாக்கப்பட. அவனுடைய இதயத்துக்கு அண்மையிலிருந்து அவனால் அன்பு செய்யப்பட, இந்த நோக்கத்திற்காக இறைவன் மனிதனுக்குத் துணைவியைக் கொடுக்கின்றார். இறைவன் முன்னிலையில் இருவரும் சரிநிகர்.

"என் எலும்பின் எலும்பு, சதையின் சதை" மனிதன் தாய் தந்தையைவிட்டு மனைவியோடு கூடியிருப்பான்" போன்றவைகள் இது ஓர் உடன் படிக்கை யென்பதை நினைவூட்டுகின்றன. கடவுள் தந்தை போலிருந்து பெண்ணை ஆணிடம் அழைத்து வருகிறார் "ஒரே உடல்" என்றதால் இவர்கள் உறவு முறிவுபடாத ஒன்று. எனவே கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும். (மத். 19/6)

இறைவனின் திட்டங்கள் விருப்பங்கள், அவர் மனிதன் மேல் செயல்பட்ட விதங்கள் அனைத்தையும் ஆதியாகம வார்த்தைகள் எமக்குத் தெளிவு படுத்துகின்றன.

இறைக் கண் நோக்கிலே இன்றைய சமுதாயத்தை நாம் உற்று நோக்கும்போது காண்பது என்ன? முக்கியமாகப் பெண்களின் நிலை என்ன? வரதட்சணைக் கொடுமையால் எத்தனை பெண்களின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுகின்றன. பெண்கள் வீட்டில் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். பேச்சுச் சுதந்திரம், சுய சிந்தனை, திறமைகள் அனைத்தும் அடக்கி வைக்கப்படுகின்றன.

வேலைப்பளு அதிகமாக இருக்கின்றது. அலுவலகத்தில் வேலை செய்யும் பெண்களும், கூலி வேலை செய்யும் பெண்களும் குடும்பத்தின் வேலையோடு, பிள்ளைகளின் பராமரிப்பு அனைத்தும் அவர்கள் மேல் சுமத்தப்பட்ட பெரும் சுமையாக இருக்கின்றன. பொறுப்பற்ற குடிகாரக் கணவன்மாரினால் எத்தனையோ பெண்கள் படும் துன்பங்கள், இன்னல்கள் கணக்கற்றவை. இன்னும் பல ஆண்கள் தங்கள் உடல் இன்பத்திற்காகப் பெண்கள் இருக்கிறார்கள் என்ற நோக்கில் அவர்களைக் கைப் பொம்மைகளாகப் பாவித்து தேவைகள் நிறைவேறியதும் விரட்டி விடப்பட்டு அவல நிலையில் கலங்கி நிற்கும் பெண்களின் எண்ணிக்கை என்ன? பின்னை

★ அருட்செல்வி றுவீனா ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுவைக்கச் சில துளிகள்

## கல்வித் திட்டம்

பிரான் தேசத்து இளைஞர்கள் நல்லமுறையில் கல்விப்பயிற்சி பெறுவதற்கு என்ன தேவை? என்று நெப்போலியன் ஒரு சமயம் வினவினர். ''நல்ல தாய்மார்கள்'' என்று பதில் வந்தது. சக்கரவர்த்தி அதை அப்படியே ஏற்றுக்கொண்டு 'ஒரே வார்த்தையில் இதோ ஒரு கல்வித் திட்டமே அமைந்திருக்கிறது' என்று கூறினர்.

## உனக்கும் இடமுண்டு

குருவானவர் தமது பங்கு மக்களில் ஒருவர், வழக்கமாகக் கோயிலுக்கு வராததால் அவரைச் சந்தித்து; ''நீங்கள் ஏன் கோயிலுக்கு வருவதில்லை? என வினவினர். அதற்கு அவர் ''சுவாமி உண்மையை உரைக்க விரும்புகிறேன். உங்கள் கோயிலுக்கு வருபவர்களில் பலர் வெளி வேடக்காரர்கள் என்றர்.

குருவானவர் ''அதற்காக நீங்கள் கோயிலுக்கு வராது நிற்கவேண்டாம். கோயிலில் இன்னும் (அத்தகைய) ஒருவருக்கு இடமுண்டு'' என பதிலளித்தார்.

பிரசங்கியார் : நான் பிரசங்கம் செய்யும்போது வயதான ஒருவர் எழுந்து வெளியே போய் விட்டாரே! நான் ஏதாவது தவறுகச் சொல்லிவிட்டேனு?

பங்குக்குரு : சேச்சே! அதெல்லாம் ஒன்றுமில்லே. அவருக்கு ஏற்கனவே தூக்கத்தில் நடக்கும் வியாதி உண்டு.

பிரசித்திபெற்ற மாடர்ன் ஆர்ட் மன்னன் பிக்காஸோ தம் வீட்டில் ஒரு சமயம் சில நண்பர்களுக்கு விருந்தளித்தார். விருந்துக்குப் பிறகு அவர் வீட்டுச் சுவர்களைக் கவனித்த ஒரு நண்பர் ''உங்களுக்கு உங்கள் ஓவியங்கள் பிடிக்காதா; உங்கள் ஓவியங்களில் ஒன்றைக் கூட உங்கள் வீட்டில் காணேமே என்றர்.

பிக்காஸோ நிதானமாக எனக்கும் ஆசைதான், ஆனல் அவ்வளவு விலை கொடுத்து வாங்க எனக்கு கட்டுப்படியாக வேண்டாமா? என்றராம்.

சினிமா
எவ்வளவு அற்புதமான ஆயுதம்
... இந்தச் சினிமா ...
இரவில் நம் மக்களோடு
கை குலுக்கியது.
விடிந்தும் பார்த்தால், நம்
விரல்களைக் காணேம்,
இந்தச் சினிமா மயில்கள்
கலாபம் விரித்து
நிழல் கொடுக்கும் என்று
நினைத்தோம்.
ஆனல் அவையோ,
நம் ஓய்வு நேரங்களின் மீது
எச்சமிட்டுவிட்டன.

பாடலாசிரியர், **வைரமுத்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இளைஞர் அரங்கம்

## சமதர்ம வாதம்

★ பல்கலைக் கழக மாணவர்கள்
★ தொழிலாளர்கள்
★ இடதுசாரிக் கட்சிகள்.

அனைத்துப் பேரும் சமதர்மவாதம் பற்றி வெகுவாகப் பேசுவர், அது தொடர்பான செயற்பாடுகளிலும் ஈடுபடுவர்.

இன்று உலகின் பெரும்பாலான நாடுகளில் சமதர்ம வாதக் கருத்துக்கள் நிலைகொள்ளத் தொடங்கியுள்ளன. ஒவ்வொரு சாராரும், குழுவினரும் 2ந் தர நிலையிலிருக்கும் போதே சமதர்மம் பற்றிப் பேசுகின்றனர். அவர்கள் முதலாம் நிலைகளுக்கு உயரும்போது மீண்டும் முதல் வாதக்குழுக்களுடன் இணைந்து கொள்கின்றனர்.

குறிப்பாக நாம் அவதானிக்கும் பெரும் உண்மை என்னவென்ருல், பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும்போது - இளைஞர் - இளம் யுவதிகள் சமதர்மக் கருத்துக்களையும், சமூக சமத்துவத்தைப்பற்றியும் - சோசலிசத்தைப் பற்றியும் பேசுகின்றனர்.

பல்கலைக் கழகங்களை விட்டு வெளியேறியவுடன், இவர்களின் குரல்களைச் சமதர்மத்திற்குச் சார்பாகக் கேட்க முடியாதுள்ளது. இவ்வாறே தொழிலாளர்களும் - வேலை கொள்வோர்களாக மாறும்போது, இடதுசாரிகள் ஆட்சி, அமைப்புப் பொறுப்புக்களை ஏற்கும் போதும் இந்நிலையே ஏற்படுகின்றது.

எனவே, சமதர்மம் பேசுவோர் நாளடைவில் முதலாளித்துவ சமூகங்களாக மாறுவதாலேயே தொடர்ந்து சமதர்மத்தைப்பற்றி அடிக்கடி அறிமுகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எப்போது, இவர்கள்;

- முதலாளித்துவ சமூகங்களின் பிடியில்,
- முதலாளித்துவக் குடும்பங்களின், அரவணைப்பில்

இருந்து முற்று முழுதாக விலகுகிருர்களோ அப்போது தான் உண்மையான சமதர்மம் நிலவும்.

இல்லையேல் - தொடர்ந்தும் இத்தகைய இலக்கற்ற, உயர்ந்த எண்ணமற்ற, காலத்திற்கு ஏற்ப சமதர்ம வாதிகளும் - சமதர்மக் கருத்துக்களும் மட்டுமே நிலவும். இக்கால இளம் சமூகம் இவ் விடயத்தில் சிந்திக்கும் போதே எதிர்காலச்சமூகத்தில் சமதர்மத்தை நிலைநாட்ட முடியும் என அன்புக்குரல் கொடுப்பது -

**கலையுலகன்.**

## சிந்தித்துச்செயற்படுவோம்

இன்றைய உலகில் பல துறைகளிலும் பல்லாற்ருலும் பெண்கள் முன்னேற்றம் கண்டு வருகிருர்கள். இது வரவேற்கத்தக்க தொன்று. பானை மாத்திரம் பிடித்த கைகள் இன்று நவீன கருவிகளைக் கையாண்டு விண்வெளி செல்லும் விந்தையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

'' மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா
பங்கையக் கைநலம் பார்த்திடவே
இந்தப்பாரில் அறங்கள் வளருமம்மா''

என்பது உண்மையாவதை இன்று நாம் காணமுடிகிறது.

ஆனல், அன்றைய நிலையே வேறு. அன்றைய சமுதாயம் பெண்களைத் தலைவிகளாகக் கொண்டதாக இருந்த வேளையில் பெண்மை அதிகாரம் படைத்ததொரு ஆளும் வர்க்கமாக இருந்தது, அந்த எழுச்சி நிலை வீழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காலத்தில் ஆண்மை மேலோங்கியது. ஆணைத் தலைவனாகக்கொண்ட சமுதாயம் அடிமைப் படுத்தத் தொடங்கியது. கேவலம் அடுப் பங்கரைக்கு மாத்திரமே என பின் தள்ளப் பட்டது பெண் சமுதாயம். வெளியுலகுக்கும் பெண்மைக்கும் தொடர்பே கிடையாதென வரையறை செய்தது உலகு. கல்விக்கும் பெண்மைக்கும் இருந்த மாபெரும் தொடர்பு படிப்படியாக அறுந்தது.

ஏனெனில், அன்று சங்ககாலப் பாவை யரிடையே இருந்த படிக்கும் பழக்கம் பாராட்டக்கூடியதாக இருந்தது. நாவல்ல நங்கையரும், பாவல்ல பாவையரும் நட மாடித் திரிந்த நற்காலம் தான் முற்காலம். அவர்கள் தாம் கற்ற கல்வியால், சமுதா யத்தில் தனி இடம் பெற்றிருந்தனர். அவர் களில் மிகச் சிறப்பு வாய்ந்தவர்கள், எந்த நிகழ்ச்சியையும் கவிதையாக்கி, பாட்டாக்கித் தருகின்ற காக்கை பாடினியாரும், இன் சுவைக் கவிபாடி பொன்னுடு புகழ் பெற்ற பொன்கயற் கண்ணியும், செம்மையுற வாழ வழிசெய்யச் செய்யுள் நெறிகாட்டிய ஔ வைப் பிராட்டியும் ஆகும். இவர்கள் தம் எழுத்தாலே உலகை இழுத்தாண்ட பொற் காலம் அக்காலம். தம் அறிவாற்றலால் அமைச்சராகி நாட்டுக்குத் தொண்டாற்றிய பாவையரும் உண்டு. இத்தகைய கல்விச் சிறப்பு நிலைக்கும் பெண்களுக்கும் இருந்த தொடர்பு அறுந்தது, அல்லது அறுக்கப்பட்டது.

'' கற்றவனுக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு '' என்றபடி கற்ற பெண்கள் மதிப் பும் மரியாதையும் பெற்றுப் புகழடைந்தனரே தவிர நாகரீகத்தால் அல்ல. பெண்கள் தம் வாழ்வால் புகழ்பெற முயல வேண்டும் என்பதை நாம் மறக்க முடியாது. மறக்கக் கூடாது. நாகரீகம் என்ற போர்வையில் தமிழ்ப்பண்புக்குப் புறம்பான ஆடை ஆணி மணிகளை மேற் கொள்வதை விட்டுவிடத் தமிழ்ப் பெண்கள் முன்வரல் வேண்டும். நாக ரீகம் நமக்குப் பொருந்துகிறதா இல்லையா என்பதைக்கூட கவனிக்காமல் கண்ட பாவனை யில் கொண்டை முடிக்கப்போய், அன்ன நடை நடக்கப்போய்க் காகம் தன் நடையும் கெட்டதுபோல் அவலமே நிரம்பி நிற்கும் பாவையரைப் பார்க்கையில் தலையில் அடித் துக் கொள்ளவே தோன்றுகிறது. கல்வியால்



ஒருவர்: என்ன இது உன் ரேடியோ விலே ' ரயில் ' விடுற சத்தம் கேட்குது.

மற்றவர்: நான் தான் சொன்னேனே என் ரேடியோவில எல்லா ' ஸ்டேசனும் ' எடுக்கும்னு.

---

சேவையால் நிச்சயம் புகழ்பெறலாம். நாக ரீகத்தால் புகழ்பெற முடியாது. நாகரீகம் நவீனம் பெறப் பெற அதுதான் உலகமென அதன்பின்னே ஓடிஓடி இறுதியில் நட்டமடை வது வரவேற்கத்தக்கதல்ல,

நம் சமீபகால உலகில் பேரும் புகழும் பெற்ற பெண்கள் பலரை எடுத்துப் பார்க்க லாம். அனைவரும் பாரதி கண்ட புதுமைப் பெண்கள் தாம். அன்னையர்க்கு அன்னையாக மங்கையர் திலகமாக மிளிர்ந்து கொண் டிருக்கும் சேவைச் செம்மல் அன்னை தெரே சாவை எடுத்துக்கொள்ளலாம். அரசியல் வானில் கொடிகட்டிப் பறக்கும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி அக்கியுனோ, இங்கிலாந்தின் இரும்புச் சீமாட்டி திருமதி மார்க்கிரட் தட்சர் எல்லோருமே புகழ் பெற்ற பெரும் பெண் தாரகைகள். ஆனால் நிச்சயம் இவர்கள் தம் நவநாகரீகத்தால் புகழ் பெற்றவர்களல்லர்.

புலவர் பாரதி '' நிமிர்ந்த நன்நடையும் நேர்கொண்ட பார்வையும், புவியில் யார்க் குமே அஞ்சாத நெறியும் கொண்டதால் செம்மைமாதர் அறம் திறம்புவதில்லை'' என்று பாடியதைப் பிழையாகக் கொண்ட மாதரே பிழையான பாதையில் செல்பவர்கள் எனலாம்.

நாம் கிறிஸ்தவப் பெண்கள் என்ற மட் டில் எமக்கும் சில வழி முறைகள் இருக்க வேண்டும். முகப்பூச்சுக்கள், உதட்டுப் பூச்சுக் களுடன் ஆலயம் வருவது சிறந்ததல்ல. உதட்டுப் பூச்சுடன் திவ்விய நன்மை பெறுவ தும் ஒரு காலத்தில் தீவிரமாகத் தடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்யப்பட்டிருந்தது என்பதை நாம் மறக்கக் கூடாது. அழகு, அது இயற்கையாக அமைய வேண்டிய ஒன்று. அழகுக்கு அழகூட்டலாம். ஆனால், அது ஆபாசமாகிவிடக்கூடாது. அழகூட்டல் நேரிய முறையில் அமைந்தால்தான் அழகு மெருகேறும், இல்லையென்றால் அழகு அசிங்கமாகிவிடும்.

எங்கள் கிறிஸ்தவ குலத்தின் மேன்மையை மாதர்குல மேன்மையை உயர்த்திய பெண்ணொருத்தி உள்ளாள். அவளே புனித அன்னை மரியாள். இயற்கை அழகுடன் இறைசித்தத்திற்காக உழைத்து அழகில் சிறந்தவளாக குணத்தில் குன்றாக, வியாகுலங்களைத் தனக்குள்ளேயே தாங்கிய சுமைதாங்கியாக, பொறுமையின் சிகரமாக, மனுக்குலத்தையே மீட்டெடுத்த இயேசு பெருமானையே உலகிற்கீந்தவளாகப் பேரும் புகழும் பெற்றாள் புனிதையரை எடுத்துக்கொண்டாலும் அவர்களும் தியாக வாழ்வாலேயே புகழ் கொண்டார்கள்.

எனவே, நாகரீகம் என்ற மோகம் புகழ் தரும், திருப்தி தரும் எனப் பிழையாகக் கருதி மாசற்ற ஆத்துமங்களைப் பாவத்தில் விழுத்தும் நடைமுறையை நாம் ஒதுக்க முன்வரல் வேண்டும். மாதத்தின் முதல் வியாழன் ஆராதனையின்போது திவ்விய நற்கருணை நாதர் முன் சொல்லும் செபத்திலும் நாம் இது பற்றிய திடசித்தத்தைப் பெறவேண்டிய வாசகங்கள் உள்ளன.

நாகரீகம் தேவை தான். ஆனால் அது எல்லைக்குட்படுத்தப்படல் வேண்டும். அந்த மாயை எம்மை ஏப்பம் விடும் என்ற நிலையில் பல நாட் பசி கொண்டவன் உணவுக் கலைவது போன்று நாகரீகத்தை தேடி ஓடித் திரியும் தன்மை ஏற்படாமல், அழிவுப் பாதையில் போகாமல் நாம் விழிப்பாயிருத்தல் வேண்டும். நம் நடை உடை பாவனைகள் கிறிஸ்தவப் பெண்கள் நாம் என்பதை உலகுக்குக் காட்ட வேண்டும். நம் தியாக வாழ்வால், நம் கிறிஸ்தவ வாழ்வால், மறுஉலக வாழ்வுக்கான படிகளில் அடி எடுத்து வைப்பதால் நாம் புகழ் பெறல்வேண்டும். □

# இலக்கியச் செய்திகள்

★ "உதயம்" பிரசுரத்தாரின் அடுத்த வெளியீடு எங்கே? காலாண்டு இதழ் என்ற பேச்சுப்படி ஏப்ரல் மாதம் இரண்டாவது வெளியீடு வந்திருக்க வேண்டும். ஜூன் மாதமும் வந்துவிட்டது. 'உதயம்' வரவில்லையே! பணம் கட்டி அங்கத்தவரானவர்கள் கேட்கிறார்கள்.

★ இலக்கியமணி செல்வராஜ கோபாவின் இயேசு புராணம் (கனடாவி விருந்து) கொம்பியூட்டர் அச்சில் வெளிவந்துவிட்டது. விலை ரூ. 500/-

★ இந்து கலாச்சார அமைச்சு நடாத்திய இலக்கியப் போட்டி முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை. தாமதம் ஏனோ?

★ இதே அமைச்சு, 1987ம் ஆண்டுக்கான பரிசளிப்பும் பட்டமளிப்பும் தமிழ்க் கலைஞர்களுக்கு ஏன் இம்முறை வழங்கவில்லை?

★ நிந்தவூர் எழுத்தாளர் சங்கம் நடாத்திய இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகி காலம் பல கடந்தும் உரியவர்களுக்கு இன்னும் பரிசுகள் கொடுபடவில்லையாம்.

★ மட்/மாநகர ஆணையாளரின் அனுசரணையுடன் மட்டக்களப்பிலுள்ள பிரபல எழுத்தாளர்கள் எழுபேர் சேர்ந்து நாவல் ஒன்றை எழுதவிருக்கிறார்கள். இது பின்னால் நூலாக வெளிவரும் என்று தெரிய வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சந்தனச் சிதறல்கள்

கோகிலா மகேந்திரன்

## 1

விடிவெள்ளி மறையக் கதிரவனின் பொற் கதிர்கள் கிழக்கு வானில் நீண்டன.

திருநெல் வேலியில் ஒரு காலை விடிந்தது. மேசையில் அவனைப் போலவே அழுத வண்ணம் இருந்த மெழுகு வர்த்தியை அவன் ஊதி அணைத்தான்.

பக்கத்து வீட்டில் வசிக்கும் ''செயின் ஸ்மோக்கர்'' ஒருவரின் இருமல் ஒலி விடாமல் கேட்டுக்கொண்டேயிருந்தது.

அந்த வீட்டின் மதிலோடு அமைந்த இந்த வீட்டின் அறையில் மேசையில் இருந்து படித்துக் கொண்டிருந்த; படித்துக்கொண்டிருந்தஎன்று நிச்சயமாகச் சொல்ல முடியாவிட்டாலும் எதுவோ செய்து கொண்டிருந்த - ''கிருப்ஸ்'' என்று நண்பர்களால் அழைக்கப்படும் கிருபானந்தன் எழுந்து வெளியே வந்தான்.

அந்த இருமல் கிருமி தன்னையும் வந்து தொற்றி விடுமோ என்பது போலப் பயந்து எழுந்து வெளியேறுவது போலிருந்தது அவனது நடை ஆனால் அது உண்மையல்ல!

ஏனெனில் அந்த இருமல் தன்னைத் தொற்றாது என்று அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவன் மருத்துவக் கல்லூரி மாணவன்.

ஒரு சேவலின் கூவல் தூரத்தில் எழுந்து தேய்ந்தது. இவன் எழுந்து வெளியே வரும்வரை கட்டிலில் படுத்துக் கிடந்த இவனது 'றூம் மேற்' ஜெபேட் இப்போது தான் சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தான்.

அடுத்த வாரம் 'அஸெஸ்மென்ற்' இருப்பதை நினைவில் கொண்டுமேசையில் அமர்ந்து 'அனரமி' புத்தகத்தை விரித்தான்.

மேசையில் கிருப்ஸின் ஃபைல்களின் கீழேயிருந்து எட்டிப்பார்த்த ஒரு 'பிளாங் சீற்' அவனது கவனத்தை ஈர்த்தது.

''ராத்திரி 'றூம் அன்ரி' நித்திரையானப் பிறகு இவன் லைற் போட்டுக்கொண்டிருந்து ஏதோ செய்தவன்; படிக்கிறனக்கும் எண்டல்லோ நானும் நினைச்சனான். இவன் வழக்கம்போல ஏதோ எழுதிக் கிழிச்சிருக்கிறான்'' என்று தனக்குள் நினைத்துக் கொண்டே அந்தக் கடதாசியை எடுத்துப் பார்த்தான்.

''சொர்க்கத்தின் விலாசத்தைப் போய்ப் பல இடங்களில் விசாரித்தேன், அவள் தான் சொர்க்கம் என்று தெரியாமல் .........''

''அன்று அவளைக் கண்டவுடன் என் கையில் கட்டியிருந்த கடிகாரம் நின்று விட்டது ......

அதற்குமாய்ச் சேர்த்து என் இதயம் அடித்துக் கொண்டது அலாரம் ......

**தொடர்கதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'' அவனுடைய உதடுகள் உச்சரிக்கும் வரை நான் உணர்ந்ததில்லை என் பெயர் இத்தனை அழகென்று...... ''

- கிருப்ஸ் -

'' மகா பரிசுத்தமுள்ள பிதாவே... உமது பிள்ளையாகிய எனக்கு இம்முறை நடைபெறும் சோதனையில் உதவி புரிய வேண்டுமென்று மன்றாட்டமாய்க் கேட்டுக்கொள்கிறேன் ...... ''

எனக் கர்த்தரைத் துதித்தபடி, உண்மையில் படிக்கவென்றே அமர்ந்த 'ரூபேட்' இதைப்பார்த்தவுடன் இந்தக் கடதாசியையும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான்,

'ரூபேட்' இதைப் பார்க்க வேண்டும், பார்த்து விட்டுத் தன்னுடன் விவாதிக்க வேண்டும். என்றே 'கிருப்ஸ்' உம் விரும்பியிருக்க வேண்டும். இல்லா விட்டால் அதை ரூபேட்டின் கண்களில் படாமல் வைத்திருக்கலாம்.

முற்றத்தில் பந்தலிட்டிருந்த கொத்து மல்லிகை மணம் நளினமாய் மனதினுள் ஓட இருவரும் அதன்கீழ் அமர்ந்தனர்.

தூரத்து மாமரத்தில் மாந்துளிர்கள் பொங்கி மணக்கோலம் கொண்டிருந்தன.

கடந்தசில மாதங்களாகவே இவன் அந்த மேரியை மறக்க முடியாமல் தவிப்பதுரூபேட்டுக்குத் தெரியும். வேறு பல நண்பர்களைப்போல 'கிருப்ஸ்' ஐக்கிண்டல் செய்து, 'கிருப்ஸ்' காணப்படும் இடங்களில் எல்லாம் 'மேரீ...' என்று கத்தி மேரி காணப்படும் இடங்களில் எல்லாம் 'கிருப்ஸ்' என்று குழறி குட்டையை மேலும் குழப்பி விடும் நண்பனாக ரூபேட் இருக்கவில்லை.

ஒரு உண்மை நண்பனுக்குரிய பல இயல்புகள் ரூபேட்டிடம் இருந்தன. அதனால்தான்... இந்தக் கவிதையைக் கண்டவுடன் கூட உடனடி ஆர்ப்பாட்டம் செய்யாமல் மெதுவாக எழுந்து வந்து இவனுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

'' இந்தக்கவிதையை நீதான் எழுதினியோ ? '' நண்பனை நிமிர்ந்து பார்த்தான் கிருப்ஸ் அவனது உள்மனம் பல நிழல் கோலங்களைப் போட்டுப் போட்டு அழித்துக் கொண்டேயிருந்தது.

அவனுக்குளே அமுத வாரிதி பொங்கினாற் போல் ஒரு ஆனந்தம்,

''கிட்டத்தட்ட இதே கருத்திலை 'மேத்தா' எழுதின கவிதை ஒண்டு அண்டைக்கு லைபிறறியிலை வாசிச்சனான். அது நினைவு வந்தது; எழுதினன்...... ''

''அப்ப... மேத்தாவின்ரை கவிதை எண்டு சொல்லு. சரி இப்ப என்ன இதை மேரியிட்டைக் குடுக்கப் போறியோ?''

'' குடுக்க வேண்டாம் எண்டுதான் நீ சொல்லுவாய் எண்டு எனக்குத் தெரியும். ஏனென்டால் அவள் உனக்குத் தூரத்துச் சொந்தக்காரி. நீயும் அவளும் ஒரே சமயம்... நான் வேறை சமயம்... ''

'' அப்ப ஏன் எனக்குத் தெரியத்தக்கதா வைச்சனி... எனக்குத் தெரியாமல் குடுத்திருக்கலாமே ? ''

நண்பனை... நண்பனின் நிலையைப்புரிந்து கொண்ட சிரிப்பு ரூபேட்டின் முகத்தில் தோன்றியது.

'' எடே... நான் சொல்றதைக் கேள். அவளும் நீயும் வேறை சமயம் எண்டதும் ஒரு பிரச்சினைதான். நான் அதுக்காகக்கூடச் சொல்லேல்லை. நீ மூண்டு நாலு தரம் அவளிட்டெ உன்ரை விருப்பத்தைச் சொல்லிப் போட்டாய்... என்ன? அவள் சீரா ஒரு மறுமொழி சொல்லேல்லை. இதுக்கு மேலை அவளுக்குப் பின்னாலை திரியாதை. உனக்கும் ஒரு சுய கௌரவம் இருக்கவேணும் எண்டதுக்காகச் சொல்லுறன்...... ''

கிருப்ஸ் சிந்தனையில் ஆழ்ந்து மௌனமாய் இருந்த விநாடிகளைத் தனக்குச் சாதகமாக்கி ரூபேட் தொடர்ந்தான்.

'' இந்தச் சந்தனச் சிதறல்கள், செவ்வந்திக் கற்பனையள் சமய சமரசம் எல்லாம் கவிதை எழுதிறதுக்குச் சரி... நாவலுக்குச் சரி... சினிமாவுக்குச் சரி... இது வாழ்க்கை. நீ வாழப்போற வாழ்க்கை.''

---

★ இலட்சியவாதி

தன்பெயரை அச்சில் காண்பது சகலருக்கும் சந்தோஷமே! புத்தகத்தில் விஷயம் ஒன்றுமில்லாவிட்டாலும், புத்தகத்தை புத்தகமில்லையென்று யார் கூறுவார்.

- பைரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆழமான சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்தவன் போல் தோன்றிய கிருப்ஸ் திடீரென விழித்துக் கொண்டு கேட்டான்;

''என்னிலை அவளுக்கு விருப்பமில்லை யெண்டா..... எனக்கு முகத்திலை அடிச்சது போலைச் சொல்லியிருப்பாளே பாலுவுக்கு நளினி அப்படித் தானே சொன்னவள். ''உம்மடை மூஞ்சையின்ரை வடிவுக்கு நான் உம்மை விரும்புவன் எண்டு நினைச்சனீரோ?'' எண்டு கேட்டவள். மேரி இன்னும் என்னைக் கண்டால் சிரிக்கிருள், கதைக்கிருள்.''

''சரி... அவளுக்கு உன்னிலை விருப்பம் எண்டே வைச்சுக் கொள்ளுவம். எங்கடை கம்பசிலை இந்தளவு பெட்டையள் உங்கடை சமயத்திலேயே இருக்க, உனக்கு ஏன் மேரியிலை விருப்பம் வந்தது?''

ருேபேட்டின் வினவுக்கான விடையைத் தன்னுள்ளே தேடினுன் கிருப்ஸ்.

□ □ □

தனது எதிர்காலம் என்ற பொன் மயமான இலக்கைத் தன் கற்பனைச் சிறகுகளால் அளக்க முயன்று கொண்டிருந்தாள் மேரி.

வெளியே கார்மேகப் படலங்கள் புகை மூட்டமாய் உருண்டு திரண்டிருந்தன. இடையிடையே வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டேயிருந்தன.

''கோட்டையிலையிருந்து சுடுருங்களோடி? ஷெல்லோ?'' பக்கத்தில் இருந்த நளினி கேட்டது மேரிக்குக் கேட்கவில்லை.

''சண்டை பெரிசாய் வரப் போகுதெண்டு சனம் கதைக்குது. சாப்பாட்டுச் சாமான்களும் கிடையாமல் வருமாம். நீங்கள் ஏதும் வாங்கி 'ஸ்ரோர்' பண்ணியிருக்கிறியளோ?''

இது காதில் விழுந்தபோது காலையில் வாசித்த பைபிள் வாசகங்கள் நினைவுக்கு வந்தன.

''ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப் படாதிருங்கள்......''

மேரி நளினிக்குப் பதில் சொல்லவில்லை. அவள் சிந்தனை வேறு இடத்தில் இருந்தது.

கிருப்ஸ் அவள் மீது வீசும் ஏக்கம் பார்வைகள், எச்சிற் பார்வைகள், இரகசியப் பார்வைகள் எல்லாம் இன்னும் தன்னைத் துரத்தித் துரத்திக் கொண்டேயிருப்பது போல உள்ளுக்குள் ஒரு உணர்வு....

ஏன் அவற்றை ஒரு தூசாகத் தள்ளிவிட்டு அவளால் ஒதுங்க முடியவில்லை?

''ஆகையால், நாளைக்காகக் கவலைப் படாதிருங்கள். நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும்'' என்பதின்படி அமைதிபெற ஏன் அவளால் முடியவில்லை? நாளை பற்றிய சிந்தனை ஏன் அவளை இவ்வளவுக்குத் தாக்குகிறது?

தனது இருப்பிடத்தில் இருந்தபடியே அங்கும் இங்கும் அசைந்து கொண்டாள்.

மூட்டுப் பூச்சி கடிக்கிறதா? வெளியில் அல்ல - மனதுக்குள்ளே அரிக்கும் பல மூட்டுப்பூச்சிகள்.

முதுகில் கம்பளிப் பூச்சி ஊருவது போன்ற சிலிர்ப்பு! விரிவுரை நடந்து கொண்டிருக்கிறது. விரிவுரையாளர் ஆங்கிலத்தில் மிக வேகமாகச் சொல்லிக் கொண்டு போகிறுர்.

''வயிற்றறையிலே இரண்டு சூலகங்களும் கருப்பையின் இரண்டு பக்கத்திலும் அமைந்திருக்கின்றன. இந்தச் சூலகங்களுக்கு இரண்டு முக்கிய தொழில்கள் உள்ளன. அவை பெண் புணரியாகிய முட்டைக் கலத்தை உருவாக்குவதோடு, அகஞ் சுரக்கும் சுரப்பியாகவும் தொழிற்படுகின்றன. ''ஈஸ்திரோசன்'' என்றபெண் இலிங்க ஓமோனை அவை சுரக்கின்றன. ஒரு பெண் பூப்படையும் போது முதன் முதலில் இந்த ஓமோன் சுரக்கப்பட்டுக் குருதி அருவியினுள் விடப்படுகிறது. இது தான் ஒரு பெண்ணில் உருவாகும் துணை இலிங்க இயல்புகளுக்குக் காரணமாக அமைகிறது.''

விரிவுரையாளர் குகநாதனின் கண்ணாடிக் கண்கள் வழக்கம் போலக் கீழேயே பார்த்துக் கொண்டிருக்கின்றன.

(தொடரும்)


---

★ சீர்திருத்தவாதி

உலகத்திலே மிகச் சீர் திருத்தவாதி யார் தெரியுமா? தன்னைச் சீர் திருத்திக்கொள்பவனே.

- பெர்னுட்ஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கத்தோலிக்க திருச்சபையும் சமகாலப் பிரச்சினைகளும்

## ஓர் ஆய்வுரைக் கண்ணோட்டம்

அத்தியாயம் 5.

### மக்களும் தலத்திருச்சபைகளும்

மக்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, உலகில் சமாதானத்தை நிலைநாட்டும் திருச்சபையின் சிந்தனைக்கும், பாப்பரசரின் கனவுக்கும் நாடுகளில் உள்ள தலத்திருச்சபைகள் மிகுந்த பங்களிப்பை வழங்க முடியும்; வழங்கவும் வேண்டும்.

வத்திக்கான் உலகச் சூழலை நன்குணர்ந்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். பின்னர் அவை நாடுகளில் செயற்படுத்தப்படவும் வேண்டும்.

நாடொன்றின் நிலைமையைப் புரிந்து கொள்ளும் நிலையைக் கொண்டே திருச்சபை உகந்த பங்களிப்பை வழங்க முடியும். இது தொடர்பாக ஒரு நாட்டின் உட்சூழலை, மக்களின் எண்ண ஓட்டத்தை, நாடித்துடிப்பைப்பற்றிச் சரியான, உண்மையான விளக்கங்கள் வத்திக்கானுக்குத் தரப்படவேண்டும். ஒரு கருத்துள்ள, பக்கச் சார்பான விபரங்கள் பாதிப்புக்களையே ஏற்படுத்தும். எனவே, நடு நிலையில் நின்று உள் நாட்டு நிலவரங்களை நோக்கி, மதிப்பீடு செய்ய வேண்டிய பொறுப்பு தலத்திருச்சபைக்குரியது. இந்த விடயத்தில் பிலிப்பைன்சு நாட்டின் தலத்திருச்சபையின் முன்னுதாரணத்தைக் குறிப்பிடுதல், அதிலும் கருதினல் சின்னின் பங்கைச் சுட்டுதல் பொருத்தமானது. பாப்பரசரின் ஆதரவு முழு அளவில் கிடைக்கக்கூடியவகையில் அவருக்கு உள் நாட்டு நிலவரம் தெரிந்திருக்கிறது.

பொதுவாக சர்ச்சைக்குரிய நாடுகளில் தலத்திருச்சபை இன்று தனது கடமைகளைச் சிரமத்துடன் நிறைவேற்றுவதையும், அதன் பொருட்டு உயிர்த்தியாகம் செய்வதும் சமீப கால வரலாற்றுண்மைகள். மக்களது ஆன்மீகம் மட்டுமல்ல, அவர்களது மனிதத்துவம் மாண்பு (Dignity) சுதந்திரம் (Liberty). பாதுகாக்கப்படுவதும் முக்கியமானதே, இந்த வகையில் சிந்தித்துச் செயற்பட்ட ஒரு பேராயர் எல்சல்வடோரில் திருப்பலிப் பூசையில் சுட்டுக் கொல்லப்பட்டதை உலகம் இன்னும் மறக்கவில்லை.

பெரும்பாலும் ஒரு மொழி, ஒரு இன நாட்டில் தலத்திருச்சபை எவ்வளவுதான் சிறுபான்மையாக இருந்தாலும் அதனுல் சிரமமற்ற முறையில் தனது திட்டங்களை வரைந்து செயல்படக்கூடியதாக இருக்கலாம் ஆனல் பன்மொழி, பல்லின, பல்மத மக்கள் வாழும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சிறுபான்மைக்குரியதாகக் கத்தோலிக்கத் திருச்சபை இருக்கும் நிலையில் தலத் திருச்சபையின் நிலைமை சிக்கலானதாகும். நடுநிலைமை தவறும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் தலத்திருச்சபையினுள் பிளவு நிச்சயம் ஏற்படவே செய்யும்.

குறிப்பாக இலங்கை நாட்டில் இரு முக்கிய இனங்களுக்கிடையே பிரச்சினை முற்றி வெடித்துள்ள இக்காலகட்டத்தில் தலத்திருச்சபை உண்மையான கிறீஸ்தவ மனநிலையுடன் செயற்படுவதாயிருந்தால் அது நடுநிலை தவறவே கூடாது. அப்படித் தவறுதல் சமாதானத்திற்குப் பங்கமாகவே அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆனாலும், இங்கு தலத்திருச்சபை நடுநிலைமையில் இல்லை என்பதை யாராலும் மறுக்க முடியாது. இரு பக்கமும் பேச முடியாது. எனவே, மௌனம் சாதிப்பதே நடு நிலைமை என்று யாரும் கூறினால் அது வடிகட்டின முட்டாள்தனமாகவும், கையாலாகாத் தனமாகவும் தான் இருக்கும். இரு பக்கமும் உள்ள குறை நிறைகளை எடைபோட்டு வழி காட்டுதலே உண்மையான நடுநிலையும், ஞானம் மிக்க செயலுமாக இருக்கும். மதில் மேல் பூனை என்ற நிலைமை உண்மையில் கொள்கையற்ற மனிதர்களுக்கே உரியது.

தலத்திருச்சபையானது உண்மையில் மக்களோடு, மககள் மத்தியில் வாழும் ஒன்றாக இருந்தால் நிச்சயமாக மக்களைப் பாதிக்கும் எதுவும் அத் தலத்திருச்சபையைப் பாதிக்கவே செய்யும். ஏனெனில் மக்களால் உருவாவதே தலத்திருச்சபை. அதன் துறவற ஏனைய அதிகாரிகள் கூட மக்களிலிருந்தே உருவானார்கள். இந்த வகையில் தலத்திருச்சபையில் உண்டாகும் பிரச்சினை என்ற புண்ணுக்கு வெறுமனே மருந்தைத் தடவுவது போல மேலோட்டமான தற்காலிக நிவாரணம் என்ற அளவில் முகாம்களமைத்து, அகதிகளைப் பேணி, வீடமைத்து, உணவு, மருந்து கொடுத்து... இப்படியாகச் செயல்படுவது ஒரு உகந்த செயலாகப் பகுத்தறிவாளர்களுக்குத் தோன்ற முடியாது. முதலில் சீழ்பிடித்துப் புரையோடக் காரணம் என்ன என்று பார்த்து அதை அகற்றும் நோய் தடுப்பு மருந்தைக் கொடுக்காதவரை எந்த வெளி நிவாரணங்களும் பயன்தரப் போவதில்லை. எனவே தலத்திருச்சபையானது பிரச்சினைகளின் அடித்தளத்தைப் பார்க்க வேண்டும், நிவாரணம் தர முயலவேண்டும் என்பது தெளிவு,

ஆனல் இலங்கையில் இந்நிலை இல்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட வேண்டிய அவசியமில்லை. தலத் திருச்சபையை உருவாக்கும் பொது மக்களாயிருந்தாலென்ன, அதிகாரிகளாயிருந்தாலென்ன, அவர்களும் மனிதர்கள் தான்; உணர்வுகளும், மொழி, இனப் பற்றும் உள்ளவர்கள் தான். ஆனல் இதுவே தீவிரமாகி, வெறியாகி மற்றவர்களை அடக்கி, ஒடுக்குவதற்கும். அழிப்பதற்கும் துணைபோகக் கூடாது.

---

## எழுத்தாளன்

✶ *அனேக எழுத்தாளர்கள் உண்மை தங்களுக்கே சொந்தம் என்று நினைப்பதால், உண்மை சொல்வதில் மிகவும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.*

*- மாட்க்கட்வேன்*

தொகுப்பு: T. தங்கேஸ்வரி,
அன்புவழிபுரம்,
திருமலை.

---

எமது நாட்டில் சனத்தொகை விகிதாசாரப் படி தமிழ்க் கத்தோலிக்கரின் எண்ணிக்கை பெரும்பான்மையின கத்தோலிக்கரை விட கூடுதலானதாகும். எனவே, பெரும்பாலான ஆயர்கள் தமிழர்களாக இருக்கவேண்டும். இங்கு அந்த நிலை இல்லாததாலோ தெரியாது தலத்திருச்சபையின் அதிகாரக்குரலாக ஒலிக்கும் ஆயரவையின் குரல் பெரும் பான்மை மொழி பேசுகிறது, அதற்கேற்ப சிந்திக்கிறது.

இலங்கையின் உள்நாட்டுப்பிரச்சினைகளில் ஆரம்பமானதொன்றாகக் கருதக்கூடிய தனிச் சிங்களச் சட்டம் உருவானபோது இலங்கைத் திருச்சபை அதையிட்டுக் கொஞ்சமும் எதிர்த்ததாகவோ, தமிழுணர்வுகளை மதித்ததாகவோ ஞாபகமில்லை. மாறாக, குறிப்பாக நீர் கொழும்பு போன்ற மறை மாவட்டங்களில் கல்விக் கூடங்களைப் பெரும் பான்மையினர் மொழியூடகமாக மாற்றுவதில் அது தீவிர பங்காற்றியது என்பது மட்டும் உண்மை. மிகக் குறுகிய காலத்தில் சின்ன உரோமை எனக் காரணமாய் அழைக்கப்பட்ட நீர் கொழும்பு மக்கள் பேரின மக்களாயினர். இன்றும் மாங்கேணியிலுள்ள வளர்ந்த தலைமுறையினர் கூட சிங்கள மொழியில் பேச மட்டுமே வல்லவர்கள். ஆனல் தமிழில் பேச, வாசிக்க, எழுதக் கூடியவர்கள் என்பது யாரும் ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும்.

இந்த வழியாக இலங்கைத் திருச்சபை ஒரு நடு நிலையான செயற்பாட்டை, இங்குள்ள மக்களை அது (தற்போதுள்ளபடி) பெரும் பான்மையினரையும், பாரதூரமாகச் சிறுபான்மையினரையும் பாதிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்றைய கட்டத்திற்குக் கொண்டு வந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விடயங்களில் புலப்படுத்தத் தவறியே வந்திருக்கிறது.

ஆடி 83 கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், முகாம்களிலும், காடுகளிலும் வாடிய நிலையில், ஊரடங்கு நாளான ஞாயிறு நாள் ஒன்றில் கடமைகளைத் தொலைக்காட்சி பூசைப்பலி மூலம் இலங்கைவாழ் கத்தோலிக்கர் நிறைவேற்றும் வாய்ப்பைக் கொடுத்த வேளை பெரும்பாலும் பூசைபேரின மொழியில் நடத்தப்பட்டமை, தலத் திருச்சபையின் மன ஓட்டத்தை வெளிப்படுத்தவே செய்தது.

அரசியல் ரீதியில் முட்டுக்கட்டை தோன்றி அப்பாவி மக்களின் உயிர் அநியாயமாகப் பறிபோகும் நிலையில் தலத்திருச்சபை உண்மையைக் கண்டுணர்ந்து, இதுவே பிரச்சினை என்றும் அதற்கு உரிய தீர்வாக இது அமையும் என்றும் ஒரு பதிலை அறுதியிட்டுக் கூறவேண்டும். உண்மையில் நாம் முன்னர் கண்டதுபோல உலகக் கண்ணோட்டத்தில் திருச்சபையின் குரலுக்கு மதிப்பு உண்டு. ஆனால் இது நடந்ததா? என்றால் அதுதான் இல்லை. நாளாந்த சம்பவங்களை அரச தொடர்பு சாதனங்களினின்றும் பெற்று அவற்றின் அடிப்படையில் ஒருபக்க சார்புக் கண்டனங்களை தெரிவித்து தன்னையறியாமலே தன்னுடைய பேரினச் சிந்தையை அது காட்டிக் கொண்டுவிட்டது. தற்போது கூட அதன் செயற்பாடு நடுநிலை தவறியே நிற்கிறது. அரசுக்கு ஆதரவாகக் குரல்கொடுப்பதில் அதை மிஞ்ச முடியாது என்பதுபோல் அரசின் முயற்சிக்கு ஆதரவு என்கிறது. என்ன அடிப்படையில் இந்த ஆதரவு? இம் முயற்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் உண்டா? என்ன வழிகளில் இது நன்மை? இது பற்றிய விளக்கம் தர அது கொஞ்சமாவது சிந்தித்ததாகக் காணோம்.

இந்த வரிசையில் வெகு சமீபத்திலும் ஒருசில சம்பவங்கள் நடந்தன. இதே தொண்டன் பத்திரிகையில் தமிழக ஆயரவையின் அறிக்கைக்கு இலங்கைத் தலத் திருச்சபையின் தலைமைப்பீடம் மறுத்துக் குரல் கொடுத்தமை பற்றி அதன் ஆடி இதழில் கண்டிருப்பீர்கள். இதுபோல நம் நாட்டில் மிகச் சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தை எடுத்துப் பார்ப்பதும் பொருத்தமாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுள் ஒருவனாக நின்று யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை தாள முடியா விரக்தியின் எல்லையில் நின்று சம்பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் குரல் கொடுக்கிறார்; இன்றுள்ள நிலைமை மாறித் தமிழன் மனிதனாக வாழ வழிசெய்ய ஐ. நா. சபையை இனியாவது கோரவேண்டும் என்று குரல் கொடுக்கிறார். (வயதான நிலையிலும் சிங்கம் சிங்கம்தான் என அவர் நிரூபிக்கிறார்). ஆனால் இவ்வளவு நெருக்கடியிலும் அவரது குரல் தனித்து நிற்கும் பரிதாபத்தையே காண்கிறோம். (தமிழ்ப் பகுதிகளின் ஏனைய தலைமைக் குரல்கள் எங்கே போயின? வாயடைத்துப் போயினவா? என்பது சாதாரண உணர்வு பூர்வமானவர்களின் அங்கலாய்ப்பாகும்).

தலத் திருச்சபை வேகமாக மறுத்துரைக்கிறது. இது தனி மனித அபிப்பிராயம். தலத்திருச்சபையின் அபிப்பிராயமல்ல என்று இல்லை இது தமிழ்ப் பகுதியின் அபிப்பிராயம். தமிழ்ப் பகுதியும் தலத் திருச்சபையின் ஓரங்கமே என்று மற்ற எவரும் முன்வராத நிலையில் தொடர்ந்து வெளியான 'தேசிய' என அடைமொழி இட்டுக் கொள்ளும் நாளிதழ்கள் யாழ் ஆயரைப் புத்தி பிசகி விட்ட மனிதராகக் காட்டிவிட முயற்சியும் செய்தன. யாரும் இதை மறுத்ததாயும் காணோம்!

இச்சம்பவங்களை இங்கு ஆய்வதன் நோக்கம், இவ்விரு சந்தர்ப்பங்களிலும், துன்பப்படும் தமிழ் மக்களின் அவலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழக ஆயர்கள், யாழ் ஆயர் மூலமாக, அவ்விரு சந்தர்ப்பங்களிலும் தலத் திருச்சபையின் மறுப்பு உடனடியாக வருகிறது. இது தமிழ் மக்களின் உணர்வுக்குத் தலத்திருச்சபை மதிப்பும், உரிய இடமும், அனுதாபமும் கொடுக்கத் தயாரில்லை என்பதையே காட்டுகின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்கே.

சுருக்கமாகப் பேரின, சிற்றினத் திருச்சபையாக இன்று தலத்திருச்சபை பிளவுபட்டு நிற்கிறது. பாதிப்பவனின் நிலையினின்று பாதிக்கப்படுபவனின் மன நிலையைப் புரிந்து கொள்வது சிரமம். ஆனால் பாதிக்கப்படுபவனால் பாதிக்கச் செய்பவனை ஓரளவு பூரணமாக விளங்கிக் கொள்வது சுலபம். இது தான் இங்குள்ள நிலைமை! ☐

**- ஆனந்தா A. G. இராஜேந்திரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் வளர...

**துணை நில்லுங்கள் !** **பரிசை வெல்லுங்கள் !!**

## செய்யவேண்டியது இதுதான்

★ தொண்டனுக்கு இரண்டு புதிய சந்தாக்களைச் சேர்த்து, பிரசுரிக்கப் பட்டுள்ள சந்தாப் படிவத்தையும் நிரப்பி இருவரதும் ஆண்டு சந்தாவாக (50 - 50) ரூபா 100/- காசுக்கட்டளையில் ஆசிரியர் பெயருக்கு அனுப்பப் படவேண்டும்.

★ ஒவ்வொரு 200 சந்தாக்கள் சேர்ந்ததும் சீட்டிழுப்பின் மூலமாக, சந்தாக் கள் சேர்த்தனுப்பிய மூவருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

★ ஒருவர் எத்தனை சந்தாக்கள் வேண்டுமானாலும் சேர்த்து அனுப்பலாம். ஆனால் அவை மறுபக்கத்தில் உள்ள சந்தாப் படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு படிவமும் தனித்தனியாகவே கணக் கிடப்படும். அதிக சந்தாக்கள் சேர்த்து அனுப்புவோருக்கு சிறப்புப் பரிசுகள் உண்டு.

★ குறிப்பிடப்படும் மாதத்திலிருந்து தொடர்ந்து பன்னிரண்டு மாதங்களுக் குத் தொண்டன் இதழ்கள் தவறாது அனுப்பப்படும்.

★ ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு சந்தாக்களையாவது சேர்த்து தொண்டன் வளரத் துணை நிற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முகவரி:-

**ஆசிரியர் - தொண்டன்**

சமூகத்தொடர்பு நிலையம்,

ஆயரகம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன் வளரத் துணை நிற்போம்

## சந்தாப் படிவம்

(1) பெயர் : ....................................................................

முகவரி : ....................................................................

....................................................................

....................................................................

(2) பெயர் : ....................................................................

முகவரி : ....................................................................

....................................................................

....................................................................

V இங்கே கத்தரிக்கவும் V

தொண்டன் வளர்ச்சிக்காக இரண்டு சந்தாதாரர்களைச் சேர்த்துள்ளேன். அவர்களது ஆண்டுச் சந்தா ரூபா 100/-. ரூபாவுக்கான காசுக்கட்டளையையும் இத்துடன் இணைத்துள்ளேன். இருவருக்கும் ........................ மாதம் முதல் தொண்டன் சஞ்சிகையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

வணக்கம்

இப்படிக்கு

....................................

ஒப்பம்.

எனது பெயர்: ....................................................................

முகவரி: ....................................................................

....................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# மனித மேம்பாடும்

**மனிதனை** ஆக்கவும் அழிக்கவும் வல்ல சக்தி கலாச்சாரத்துக்கு உண்டு. ஆபாசமான கலாச்சாரம் ஆபாசமான மனிதர்களையே உருவாக்கும், கலாச்சாரம் என்னும் சொல்லின் பொருளாக சமயம், தத்துவம், சித்தாந்தம், அறிவியல் தொழில் நுட்பம், கலை, இலக்கியம், அரசியல் - பொருளாதார-சமூக அமைப்புக்கள், கல்வி, விளையாட்டுக்கள் அனைத்தும் அடங்கும். கலாச்சாரத்தின் மூலம் ஒரு சமூகத்தில் பிறக்கும் குழந்தைகளை அச்சமூகத்துக்கு ஏற்றவர்களாக வளர்த்துக் கொள்கிறது சமூகம்.

மனிதர்கள் தான் தங்கள் கலாச்சாரத்தை உருவாக்குகிறார்கள், அல்லது மாற்றியமைக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அறிவு, சுதந்திர சித்தம் என்னும் இரு அம்சங்கள் இருக்கின்றன. இவற்றைப் பயன்படுத்தி ஆராய்ந்து, சிந்தித்து முடிவெடுத்து திட்டமிட்டு. தீயவைகளை ஒழித்து, நல்லவைகளைப் போற்றி வளர்ப்பதும் சாத்தியம்தான்.

கலாச்சாரத்தின் பல்வேறு கூறுகளில் கலை - இலக்கியம் மனிதர்களைப் பாதிக்கும் சக்தி மிகக் கொண்டது. பிற கூறுகளிலெல்லாம் உள்ள நல்லது - கெட்டதை அலசி ஆய்ந்து மதிப்பிட்டு மனித ஆக்க பூர்வமானவற்றை எடுத்துக் காட்டுகள் மூலம், மனிதன் கண்டு பின்பற்றுவதற்கு தரும் தரமான கலை - இலக்கியம் ஆழ்ந்த ஆன்மீக மாற்றத்தையே விளைவித்து விடும் வலிமை பெற்றது, கலாச்சாரப் புரட்சியை நிகழ்த்தி விடக் கூடியது.

எனவே, இந்த ஒரு துறையை மட்டும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளலாம், இத் துறையில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை கிறிஸ்துவ சமூகம் எவ்வாறு சந்தித்து வந்திருக்கிறது? சரியானவைகளை உணர்ந்து



தெளிந்து மனித மேம்பாட்டுக்கான காரியங்களை மேற்கொள்ள, இச் சமூகத்துக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புக்களின் அடிப்படையில், சாத்தியமானவைகளை எண்ணிப் பார்க்கலாம்.

## சீரழிந்து வரும் தமிழ்ச் சமூகம்...

கவிதை என்னும் ஒரு இலக்கிய வடிவத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பார்ப்போம். அமரகவி பாரதிக்கு பின் அவனுக்கு நிகரான கவிஞன் - ஆழத்திலோ, வீச்சிலோ, அர்ப்பணத்திலோ, புரட்சிகரத்திலோ, மக்களை நெருங்கிப்பேசும் எளிமையிலோ, இனிமையிலோ, சக்தியிலோ-அவனுக்கு நிகரான கவிஞன் அடுத்துப் பிறக்கவில்லை. கதை இலக்கியத்தில் புதுமைப் பித்தனுக்கு ஓரளவு நிகரானவர்கள் சிலர் எழுதியிருக்கிறார்கள் என்றாலும் அவனுடைய சாதனையே வியக்கத் தக்கது என்று தோன்றுகிறது. பொதுவாக நேர்ந்திருககும் ஒரு துர்ப்பாக்கியம் என்னவென்றால் போற்றத்தக்க படைப்புக்கள் வெகுஜன கவனத்தைக் கவர்வதில்லை.

மக்களைப் பரவலாகப் பெருமளவில் கவரும் கலைச் சாதனங்களில் திரைப்படமே பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அடுத்தது வானொலி. ஆனால் வானொலியிலும் சினிமாப் பாடல் அல்லது கதை வசன நிகழ்ச்சிகளே மக்கள் மனத்தை

# ஆபாச கலாச்சாரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆதிக்கம் செய்கின்றன. மூன்றும் இடத்திலிருக்கும் பத்திரிகைகளிலும் திரைப்படங்களும் படப் பாடல் காட்சிகளுமே நேயர் விருப்பங்கள் மற்றப்படி சமயம், அரசியல், பொருளாதாரம், சமூக உறவுகள் எல்லாப் இரண்டாம் மூன்றாம் தரமான செய்திகள் தான்.

திரைப்படத்தில் ஆட்சி செய்யும் உள்ளடக்கங்கள் இரண்டு. பாலுணர்ச்சி வக்கிரம், வன்முறை. திரைப்படம் செய்யும் இன்னும் ஒரு மகத்தான சேவை: போலிக் கனவுகளையும் நட்சத்திர மோகத்தையும் வளர்ப்பது. பின்னதுதான் தமிழக அரசியல் விதியையே நிர்ணயித்திருக்கிறது.

மொத்தத்தில் தமிழ் நாட்டில் சமூகத் தொடர்புச் சாதனங்களெல்லாம் மக்களுடைய அறிவை மழுக்கி, உடல் - மன ஆரோக்கியங்களைக் கெடுத்து, அவர்களின் ஆன்மாவையே அழித்து வந்திருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

## கிறிஸ்துவ சமூகம் என்ன செய்யலாம்?

இனி, இச் சூழ்நிலையில், மனித மேம்பாட்டையே தன் இலட்சியமாகக் கொண்டிருக்கும் கிறிஸ்துவ சமூகம் இச் சீரழிவிலிருந்து மக்களை மீட்க என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது?

அறுபதுகளில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிகழும் வரை, நமக்குச் சொல்லப்பட்டதெல்லாம் கண்ணையும் காதையும் பொத்திக்கொள் என்பதுதான். சினிமா கெட்டது, பார்க்காதே. பத்திரிகைகள் கெட்டவை படிக்காதே. இன்றைய நிலை அதை விடவும் மோசம். கலை இலக்கியமெல்லாம் பாதாளத்தை நோக்கி விரைந்துகொண்டிருக்கின்றன. கிறிஸ்துவ சமூகமோ பிலாத்துவைப்போல் கையைக் கழுவி விட்டு சும்மா இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனால், இரண்டாம் வத்திக்கான் சங்கம் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் நின்று, நவீன யுகத்தின் அறிகுறிகளைக் கண்டுணர்ந்து, திறந்த மனத்துடன் விவாதித்து ஆராய்ந்து மனித மேம்பாட்டுக்கான புரட்சிகரமான சிந்தனைகளையெல்லாம் வடித்துத் தந்திருக்கிறதல்லவா? இவற்றை ஆழ்ந்து படித்து நாம் என்னவெல்லாம் செய்திருக்கலாம் என்று எண்ணும்போது, எத்தனை எத்தனையோ சாத்தியங்களெல்லாம் நாம் சிந்தனைக் கண்முன் விரிகின்றன.

சமய போதனைகள் வழியாகவும் பக்தி முயற்சிகள் மூலமாகவும் திருச்சபை தூவும் வித்துக்களெல்லாம், மக்கள் வாழும் காலஇட எதார்த்தங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் செய்யப்படுவதால், பாறையின்மேல் இறைத்த வித்துக்களாக வீணாகிப் போகின்றன. சக்தி வாய்ந்த சமூகத் தொடர்புச் சாதனங்கள் மூலம் மக்களைத் தாக்கும் கலை இலக்கியம் அவ் விதைகளைப் பொசுக்கித் தீய்த்து விடுகின்றன.

மனித மேம் பாட்டுக்கான நற்செய்தியையும், அதை உலகமெங்கும் போதிக்கும் நல்லாணையையும் பெற்றுக் களத்தில் இறங்கிப் பணிபுரிய வேண்டி வளர்ந்த திருச்சபை சக்திமிக்க தொடர்புச் சாதனங்கள் மூலம் கலை இலக்கியத் துறைகளில் தன் நிகரில்லா ஆதிக்கம் பெற்றிருக்க வேண்டும். வலிமையும் தெளிவும் கொண்ட திறமை வாய்ந்த கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் உருவாக்கியிருக்க வேண்டுப், மக்கள் எதிர்கொள்ளும் கலை இலக்கியப் படைப்புக்களில் சரியானவைகளைப் பகுத் துணர்ந்து இனங்காட்டியிருக்கவேண்டும். அவற்றைப் பகுத்துணர்ந்து அறிந்து பயன்பெறும் பக்குவத்தையும் ஆரோக்கியமான விமர்சனக் கண்ணோட்டத்தையும் மக்களிடம் கூர்மைப்படுத்தியிருக்க வேண்டும்.

1. சமய அமைப்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும் புத்தகங்களும், வியாபாரம் ஒன்றையே குறிப்பாகக் கொண்டு ஆபாசமாக வெளிவரும் பத்திரிகைகள் புத்தகங்களுக்கெல்லாம் முழுமையான மாற்றாக இடம் பிடித்திருக்கவேண்டும். ஆனால், அவற்றின் பரிதாப நிலை பார்த்துச் சிரிக்கவும் முடியவில்லை, அழவும் முடியவில்லை, தொழில் நேர்த்தி கூட அரிதாகி விட்டது. அவை நடப்பது தொடர்ந்த ஜீவ மரணப் போராட்டம் தான். வாழவும் தெரியவில்லை, சாகவும் மனமில்லை. நம்மவர்களே நம் பத்திரிகைகளை வாசித்து ரசிக்கும் நிலையில்லை. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவல நிலைக்குப் பரிகாரம் தேடும் வகை யில் கூடிச் சிந்திக்கவும் விவாதிக்கவும் முயற்சியெடுக்க சம்பந்தப்பட்டவர் களுக்கு, உந்துதலும் இருப்பதாகத் தெரியவில்லை.

2. அச்சுத் துறையை இம் மண்ணில் அறி முகப்படுத்தியவர்கள் நல்ல சில பதிப் பகங்களைக் கட்டி நல்ல நல்ல நூல்க ளெல்லாம் இவற்றிலிருந்துதான் வெளி வருகின்றன என்ற அங்கீகாரத்தை மக்க ளிடம் பெற்றிருக்க வேண்டாமா?

3. வாழ்வுதரும் நூல்களையும் பத்திரிகைகளை யும் தொகுத்து வாசிக்கத் தரும் நூல் நிலையங்களையும் படிப்பகங்களையும் ஊருக்கு ஊர் திறந்து வைத்திருக்கவேண் டும். அவற்றையொட்டி வாசகர் வட் டங்களைத் தொடங்கி ஆரோக்கியமான வாசிப்பு வழக்கத்தை வளர்த்திருக்கலாம்

4. நாடகம், இசை, இவற்றுக்கான மன்றங் களை உருவாக்கி அவற்றுள் நல்லவற்றை மக்களுக்கு வழங்கலாமே. தரமான வற்றை அறிமுகப்படுத்தலாம். புதிய வற்றைப் படைக்கலாம்.

5. நாலு நல்ல திரைப்படங்களைப் படைக்க லாம். பட்டி தொட்டியெல்லாம் திரை யிட்டு இயேசுவின் நற்செய்தியை, படிக் காத பாமரர்களுக்கும் நெஞ்சில் இடம் பெறுமாறு செய்தால் அவர்கள் தங்கள் விடுதலைக்கான சிந்தனை வித்துக்களைப் பெற்று வளரமாட்டார்களா?

படித்தறியா பாமர மக்கள் என்று எண் ணும்போது ஒரு கேள்வி எழுகிறது. இத் தகைய எளிய மக்களுடன் - இவர்கள் உள்ளத்துடன்-உறவாட இவர்களிடையே வழங்கும் பாட்டும் கூத்தும் பிற மக்கள் கலைகளும் நல்ல வாய்ப்பாயிற்றே. இம் மக்கள் கலை வடிவங்களைத் தொகுத்து அறிந்து அவற்றில் தோய்ந்து, அவற் றில் நற்செய்தியைப் படைத்து வழங்கு வது எத்துணை அருமையான பணி. இத் துறையில் நாம் தீவிரமாக இறங்காவிட் டால் அதைப் பாவம் என்றே சொல்ல வேண்டும்.

உயிர்த்தெழும் விழா நெருங்கும்போது கிராமங்களில் இயேசு வாழ்க்கை பாஸ்கா நாடகங்களாக விடிய விடிய நடைபெறு வதைப் பார்த்திருப்பீர்கள். அக்கம் பக் கத்து கிராமங்களிலிருந்தெல்லாம் சோறு கட்டிக்கொண்டு ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து, விழித்திருந்து இயேசுவுடன் - இயேசுவின் வாழ்வோடும், சொல்லோ டும் - உறவாடுவதை - உரையாடுவதை நாம் கண்டதில்லையா? சத்திய வேதம் எத்தனை ஆழமாய்ப் பாயும் அனுபவம்... இத்தனை சக்தியுடன் எந்த குருவானவர் தான் மறையுரை ஆற்றமுடியும்? பாஸ்கா ஒரு மக்கள் கலை வடிவம். அதை ஊக்கு விக்க வேண்டும்.

---

**மகன் :** அம்மா! நான் சாமியாராகத் தான் போவேன்.

**தாய் :** ஏன்டா ?

**மகன் :** பின்ன என்னம்மா? ஞாயிற் றுக்கிழமையில் கோயிலில் உட் கார்ந்து இருக்க முடியல்ல. சாமியாரா போனாலாவது மேடையில் பிரசங்கம் வைக்க லாமில்ல ...!

---

6. இன்னும் ஓவியம் சிற்பம் போன்ற நுண் கலைகளெல்லாம் தமிழகத் திருச்சபையின் கவனத்தை எட்டவில்லையே. ஊர்தோ றும் இவற்றில் நல்ல படைப்புகளைக் கொண்டு பொருளுள்ள கண்காட்சிகள் நடத்தலாம், போட்டிகள் பயிற்சிகள் மூலம் இக் கலைஞர்களை ஆதரிக்கலாம். நம் பத்திரிகைகளில் கூட சித்திரம் எழுத எத்தனை ஓவியர் உண்டு? நம் கோவில் களில் நம் ஆன்மாவை உயர்த்தும் சிற் பங்கள் வடிக்க தரம் வாய்ந்த சிற்பிகள் நம்மிடையே யார் உண்டு?

7. திரைப்படம் தயாரிக்க பெரும் பொருள் செலவாகும். விட்டுவிடுவோம். திரைப் படச் சங்கங்கள் ஊர்தோறும் தொடங்க லாமே. திரை அரங்குகளுக்கு நல்ல யதார்த்தமான படங்களைத் திரையிட்டு மகிழலாம். அப்படங்களின் பின் கூடி விவாதித்து பயன் தரும் நல்லெண்ணங் களை மக்கள் பெறலாம். திரைப்படங்

தொடர்ச்சி 26ம் பக்கம் பார்க்க.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்

மாணவமணிகளே !

இந்த இதழிலிருந்து தொண்டன் உங்களுக்காக இரண்டு பக்கங்களைச் சுமந்து வருகிருன். க. பொ. த. உயர்தரத்தில் கிறீஸ்தவத்தை ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்களுக்கு பயன்தரும் விதத்தில் மாணவர் பக்கம் அமைக்கப் பட்டுள்ளது. இதனைப் படித்தும், பாதுகாத்தும் வையுங்கள். நீங்கள் சிறந்த முறையில் சித்தியடைய இது உதவும். உங்களுக்காக திரு/மட்-மறைமாவட்ட மறைக் கல்வி நிலையத்தின் சார்பில் அருள்திரு. பி. ஜோசப் அவர்கள் இதனை தயாரித்து வழங்குகிருர்.

## அப்போஸ்தலர் பணி -

**முன்னுரை :** இயேசுவின் பிறப்பு, வாழ்வு, அவரது பாடுகள், இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்பு போன்றவற்றை நான்கு நற்செய்தியாளர்களும் தங்களுக்கேயுரிய பாணியில் முன் வைத்ததைப்போன்று அவரது விண்ணேற்புக்குப் பின் நடந்த நிகழ்ச்சிகளை அதாவது இயேசு வாக்களித்தது படிப்படியாக நிறைவேறுவதையும் அவர் தொடங்கி வைத்தது பல தடைகளையும் தாண்டி வளர்ச்சியடைவதையும் அப்போஸ்தலர் பணியின் ஆசிரியர் தன்னுடைய நூலில் காட்ட முனைகின்ருர்.

**ஆசிரியர் :** இன்று ஏகமனதாக விவிலிய அறிஞர்கள் அப்போஸ்தலர் பணியின் ஆசிரியர் லூக்கா என்றே ஏற்றுக்கொள்கின்றனர். லூக்கா தனது இரு நூல்களான நற்செய்தி அப்போஸ்தலர் பணி என்பவற்றை தெயோபிலே என்பவருக்கே அர்ப்பணிக்கின்ருர். அத்துடன் இரு நூல்களினதும் இலக்கணம், நடை, நோக்கம் என்பவற்றில் ஒருங்கிணைவு காணப்படுகிறது.

லூக்கா சீரியாவைச் சேர்ந்த அந்தியோக்கியாவில் வாழ்ந்தவர். அவர் புனித சின்னப்பரின் இரண்டாம் மறை பரப்புப் பயணத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் "நாங்கள் செய்தோம்" "நாங்கள் சென்ருேம்" என்று பன்மைத் தன்மையில் குறிப்பிடுவதைக் கொண்டு அவர் புனித சின்னப்பரின் பயணத் தோழனுக இருந்தார் என்று உறுதியாகக் கூற முடியும், (காண் அப். பணி 16/10-17 20/5-10) லூக்கா ஒரு கிரேக்க மருத்துவர். சிறந்த கல்விமான். வரலாற்று ஆசிரியர், கிரேக்க அறிஞர், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நல்ல கிறிஸ்தவர் என்பதை அவரது நூலே எண்பிக்கின்றது.

**மூலம் :** லூக்கா நேரில் கண்டவற்றையும் நிகழ்ச்சிகளோடு தொடர்புள்ளவர்களிடமிருந்து கேட்டறிந்தவற்றையும், புனித சின்னப்பரின் பயணக் குறிப்புக்களையும், புனித சின்னப்பரின் பணிகள் பற்றிய அந்தியோக்கிய திருச்சபையின் குறிப்புக்களையும் மூலச் செய்தியாகக் கொண்டு தம் கருத்திற்கேற்ப ஒன்றுபடத் தொகுத்து, தமக்கே உரிய உயரிய நடையில் நாடகப் பாணியில் அப்போஸ்தலர் பணி நூலை ஆக்கியுள்ளார்.

**பிரிவு :** இந் நூலின் பெயர் 'அப்போஸ்தலர் பணி' எனக் குறிப்பிடப் பட்டாலும் எல்லா அப்போஸ்தலர்களையும் பற்றிக் குறிப்பிடவில்லை. இராயப்பர், சின்னப்பர் ஆகிய இருவரின் பணியை மாத்திரமே முக்கியப்படுத்துகின்ருர். இதன் அடிப்படையில் அப்போஸ்தலர் பணியை இருபெரும் பிரிவாகப் பிரிக்க முடியும். (1 - 12) அதிகாரங்கள் திருச்சபை உருவாகியதையும் அதன் ஆரம்ப வளர்ச்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கட்டத்தையும் கூறுகிறது - முதல் பகுதியில் முக்கிய கதா பாத்திரமாக இராயப்பர் திகழ்கிறார். ஏனைய 16 அதிகாரங்களும் (13-28) திருச்சபை எவ்வாறு உலகின் இறுதி எல்லை வரைக்கும் பரவுகின்றது என்பதைக் கூறுகின்றது. இரண்டாவது பகுதியின் முக்கிய பாத்திரமாக தார்சு நகரைச் சேர்ந்த (சவுல்) சின்னப்பர் திகழ்கின்றார்.

வேறு சிலர் இறை வார்த்தை படிப்படியாக பல இடங்களுக்கும் பரவுவதை அடிப்படையாகக் கொண்டு அப்போஸ்தலர் பணியை மூன்று பிரிவாகப் பிரிக்கின்றனர் -

1. பலஸ்தீனாவில் பணி - 1/1-9/43
2. பரந்த உலகில் பரவத் தொடங்குதல் 10/1-15/35.
3. உலகின் இறுதி எல்லை வரை - 15/36-28/31.

**நோக்கம்:** லூக்கா இந்நூலை எழுதியதன் நோக்கம் வரலாற்றைத் தருவதல்ல. மாறாக ஆதித்திருச்சபையின் பண்புகள், அது எதிர்கொண்ட பிரச்சனைகள், அதன் படிப்படியான வளர்ச்சி இவற்றை வாசகருக்குத் தருவதே அவரின் நோக்கமாகும். இயேசு விண்ணேற்படைத்த நாள் வரை அவர் செய்தவை போதித்தவை யாவற்றையும் தனது நூலின் முதற் பகுதியில் அதாவது நற்செய்தியில் எழுதியதாகக் கூறுகின்றார். (அ. பணி. 1/1) "எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும், மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்" (1/8) என்று இயேசு தமது விண்ணேற்புக்கு முன் வாக்களித்தது எவ்வாறு படிப்படியாக நிறைவேறுகின்றது என்பதைத் தனது நூலில் காட்ட விளைகின்றார்.

கிறிஸ்துவின் நற்செய்தி வலிமை மிக்கது, சக்தி வாய்ந்தது. வேறு எந்த சக்தியும் அது பரவுவதைத் தடுத்து நிறுத்த முடியாது, அது உலகெங்கும் பரவும் ஆற்றல் கொண்டது. உலகின் இறுதி எல்லை வரைக்குமே பரவத் தொடங்கி விட்டது. யூத மறையின் தலை நகரமாகிய எருசலேம் மலையில் யூதர்கள் மத்தியில் கிளையாக ஆரம்பித்த திருச்சபை புறவினத்தாரின் தலைநகரமாகிய உரோமையில் புறவினத்தவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட பெரிய மரமாக வளர்ந்துவிட்டது. அதாவது இறைவன் தம் ஒரே மகன் இயேசுவில் ஆற்றிய செயல்கள் நிறைவேறிவிட்டன. இறையரசு தொடங்கி வைக்கப்பட்டுவிட்டது. ஆனால் அந் நிகழ்ச்சிகளின் தாக்கம் (effect) இன்னும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இறையரசு (திருச்சபை) யூத மறையின் குறுகிய சுவர்களினின்று விடுபட்டு உலகனைத்துக்கும் போதிக்கப்படுகின்றது. இறையரசு பரவிக்கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துக்கூறுவதே ஆசிரியரின் நோக்கமாகும்.

## திருச்சபையின் ஆரம்பக் கட்டம் -

முதன் முதலில் 11 அப்போஸ்தலர்களுடனும் ஏனைய சீடர்களுடனும், சில பெண்களுடனும் ஆரம்பமாகிய திருச்சபை இரகசியமாகத்தான் செயல்படத் தொடங்குகின்றது. ஏனெனில் தலைமைச் சங்கத்தினர் தங்களை எவ்வேளையிலும் கைது செய்யலாம் என்ற பயம் அவர்களை ஆட்கொண்டிருந்தது. தங்கள் தலைவரின் இறப்பைத் தொடர்ந்து அவர்கள் மூடிய கதவுகளுக்குப் பின்னால் மறைந்திருந்தனர், பயந்திருந்தாலும் அவர்கள் ஒரே மனதாய்ச் செபத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

## மத்தியாஸ் தெரிவு -

யூதாசின் பிரிவினால் ஏற்பட்ட குறை விடத்தை நிரப்ப ஒருவரைத் தெரியும்படி இராயப்பர் கேட்டுக் கொள்கின்றார். அப்போஸ்தலரின் பெயர் வரிசையில் இராயப்பரின் பெயர் முதலாவதாக வருவது, இராயப்பரே கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசுவது இராயப்பரின் தலைமைத்துவம் ஆதித் திருச்சபையின் ஆரம்பக் கட்டத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை எண்பிக்கின்றது. புதிதாகத் தெரிவு செய்யப்பட வேண்டியவருக்கு இருக்க வேண்டிய தகுதியும் கூறப்படுகின்றது. அவர் இயேசுவின் ஞானஸ்நானம் முதல் விண்ணேற்பு வரை தங்களோடு வாழ்ந்த ஒருவராக இருத்தல் வேண்டும், இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக இருக்கவேண்டும். அதாவது இயேசு உயிர்த்த பின் சாட்சியளித்த வேளைகளில் தங்களோடு இருந்தவராக இருக்க வேண்டும். மேற்கூறிய தகுதிகளையுடைய பர்சபாஸ் என்னும் சூசை, மத்தியாஸ் ஆகிய இருவரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெயர்கள் முன் வைக்கப்படுகின்றன. அன்று வரும் முதலில் தங்கள் தெரிவை இறைவன் வழி நடத்தும்படி செபிக்கின்றனர். பின்னர் யூத முறைமைப்படி தெரிவது தாங்களல்ல, இறைவனே தெரிகின்றார் என்பதை உணர்த்த சீட்டுப் போட்டனர், மத்தியாஸ் யூதாசின் இடத்தை நிரப்ப நியமிக்கப்படுகின்றார்.

## வினாக்கள் -

1. அப்-பணி நூலின் ஆசிரியர் யாரென்பதை ஆதாரத்துடன் கூறுக.
2. அப்-பணி நூல் புனித லூக்கா நற்செய்தியின் தொடர்ச்சி என ஏன் அழைக்கப்படுகின்றது?
3. அப்-பணி நூலைப் பிரிக்கக்கூடிய பிரதான பிரிவுகளைத் தருக.
4. லூக்கா அவர்களினால் அப்-பணி நூல் எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?
5. லூக்கா எவற்றை ஆதாரமாகக்கொண்டு தனது நூலை எழுதியுள்ளார்?
6. யூதாசுக்குப் பதிலாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் யார்? அவரிடம் எதிர்பார்க்கப்பட்ட தகுதிகள் எவை?

## விவிலியக் கருத்தரங்கு

கல்முனைக் கார்மேல் பாத்திமா கல்லூரி பெண்கள் பகுதியில் ஏப்ரல் 15, 16ம் திகதிகளில், பங்குத்தந்தை R, S. லோப்பு அடிகளாரின் தலைமையின் கீழ் விவிலியக் கருத்தரங்கு நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் முக்கிய பேச்சாளர்களாக;- பங்குக்குரு R. S. லோப்பு அடிகள் சங். சகோதரர் S, A. I. மத்தியு அவர்கள் திருவாளர் றெக்ஸ் ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரையாற்றினர்.

இவர்களுக்கு உதவியாக:-

அருட்செல்வி டெலாறேஸ் அவர்களும்
அருட்செல்வி ஜீவனினா அவர்களும்
சேவையாற்றினர்.

இவ் விவிலியக் கருத்தரங்கில் விவிலியத்தை எவ்வாறு முறையாக விளங்கிக்கொள்வது என்றும், பழைய உடன்படிக்கையிலும் புதிய உடன்படிக்கையிலும் உள்ள நுணுக்கங்களை எல்லோரும் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையிலும், தெரியப்படுத்தினார்கள். கலந்துரையாடல்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்திருந்தன.

இருபது பேர் பங்கு பற்றிய இக் கருத்தரங்கின் முடிவில், இதே போன்ற ஒரு கருத்தரங்கு இவ்வாண்டினுள் இதில் பங்கு பற்றுதோருக்கு நடாத்தப்பட வேண்டுமென்றும், இவ் இருபது பேர் கொண்ட குழுவுக்கு இதைவிட ஆழமான முறையில் மேலுமொரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென்றும், முடிவு செய்யப்பட்டது. இவற்றைச் செயற்படுத்த ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

தகவல்: பெற்றேனிலா,

23ம் பக்கத் தொடர்ச்சி......

களைப் பார்த்து சரிவர ரசிக்கவும் திறம்பட விமர்சிக்கவும் அறிவைப்பெற இது வழிவகுக்கும். ஒவ்வொரு உயர் நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் மாணவர்க்காகவும், ஊர் மக்களுக்காகவும் திரைப் படச் சங்கங்கள் தொடங்கி நடத்துவது தமிழ் நாட்டில் மிக்க நலம் தரும்.

- பேராசிரியர் ஆல்பெர்ட்
- எம். ஏ. எம். பில்

இளைஞர்க்கும் சிறுவர்க்கும் யார் யாரோ பத்திரிகைகள் நடத்துகிறார்களே. நூல் வெளியிடுகிறார்களே. அவற்றை விடச் சிறப்பாக வெளியிடும் அளவுக்கு நமக்கு அனுபவமும் அறிவும் செய்தியும் இருக்கவேண்டுமே. இல்லை என்றால், நம் கல்விக்கூடங்கள் மூலம் இளைஞர்களுடனும் சிறுவர்களுடனும் பழகும் பழக்கம் பொருளற்றது.

மொத்தத்தில் நம் கிறிஸ்துவ சமூகம் ''கடமை''களைச் செய்து வருகிறது. தன் காரியங்களை புரட்சிகரமான விமர்சனத்துக்குட்படுத்திச் சிந்திக்க நேரமில்லை. காலத்துக்கேற்ப புதிய புதிய வழிகளையெல்லாம் கண்டு மனிதரை நேசிக்கவும் மேம்படுத்தவும் தோன்றுவதில்லை, இனிமேலாவது புதிய கலாச்சாரத்தை உருவாக்கும் பணியில் நாம் ஈடுபடுவோம். ☐

நன்றி தோழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியப் புதிர் - 1

**பரிசு: ரூபா 50/-, 25/-.** **முடிவுத் திகதி: 30-6-88.**

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டியை நிறுத்திக் கொண்டு விவிலியப் புதிர் என்னும் புதிய போட்டியை இவ்விதழில் அறிமுகப் படுத்துகிறோம். விவிலிய அறிவை வளர்க்கவும், விவிலியத்தைப் புரட்டவும் இது மேலும் உதவும் என்றும் நம்புகிறோம். இதன் விபரங்களைக் கீழே பார்க்கலாம்.

இயேசு வாழ்ந்த காலத்திலும் அதற்குப் பிறகும் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எமக்குத் தருவது புதிய ஏற்பாடு. புதிய ஏற்பாட்டைப் படிக்குந்தோறும் சில சொற்கள் வேற்று மொழிச் சொற்களாகி இருப்பதையும், அதற்குரிய கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளதையும் காணலாம். புதிய ஏற்பாட்டினை அடிக்கடி புரட்டுபவர்களுக்கு ஒரு போட்டி. நீங்கள் செய்ய வேண்டியது இது தான். கீழே சில சொற்கள் புதிய ஏற்பாட்டிலிருந்து பொறுக்கி எடுக்கப் பட்டு உங்களுக்கு தரப்படுகின்றன. அதற்கான சரியான கருத்தை போட்டிக் கூப்பனில் நிரப்பி அனுப்பும் அதிஸ்டசாலிகளுக்குப் பரிசு உண்டு.

1. கோர்பான் ......................................
2. பாஸ்கா ......................................
3. கொல்கொத்தா ......................................
4. சிலோவாம் ......................................
5. அக்கெல்டாமா ......................................
6. தபீத்தா ......................................
7. எப்பேத்தா ......................................
8. எலிமா ......................................
9. தலித்தா கூம் ......................................
10. ஓசான்னா ......................................

முழுப் பெயர்: ......................................................................

முகவரி: ......................................................................

......................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி – 49.

## முடிவுகள்

இடமிருந்து வலம் -

1. ஆளுநன்
2. சாக்கு
4. ஈசோப்
5. சட (லம்)
6. சீட்டு
7. வானம்
8. உடன்படிக்கை
9. குளிர்
11. அலகை
12. முப்பது
13. மண்
14. வாள்
15. காடி
16. ரிக (கரி)

மேலிருந்து கீழ் -

1. ஆடை
3. குடம்
6. சிடர்
7. வாக்கு
8. உடல்
10. ர்ணீண்க (கண்ணீர்)
11. அப் (பா)
12. முள்
13. மரி

பரிசு பெறுவோர் :

முதலாம் பரிசு: - நுனுந்தா கனகரெத்தினம்
மைக்கல்ஸ் கிளினிக்
வீச்சுக் கல்முனை,
மட்டக்களப்பு.

பங்குபற்றியவர்கள் :- 45. சரியான விடை அளித்தோர் :- 01.

குறிப்பு : இம்முறை ஒருவர் மட்டுமே அனைத்துச் சதுரங்களுக்கும் சரியான விடையை அளித்திருந்தார். பெரும்பாலும் எல்லோரும் இல, 1 இடமிருந்து வலம் ஆளுநன் என்பதற்கு பிலாத்து என்று பிழையான விடையைத் தந்திருந்தனர். இதனால் இல, 2 மேலிருந்து கீழ் 'வருகின்ற ஆடை' என்னும் சொல்லும் பிழையாகி விட்டதே ! கொஞ்சம் யோசித்திருந்தால் சரியாகவே எழுதியிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமல அன்னை அன்பக 2வது ஆண்டு விழாவும் புதிய இல்லத் திறப்பு விழாவும்.

ஃ ஃ ஃ

**வ**ன்செயலால் அல்லலுற்றுத் தாய் தந்தையரை இழந்து தவிக்கும் சிறுவர்களுக்கு மறு வாழ்வளித்து மனத்துணிவுடன் அவர்களும் நற்பிரசைகளாக வாழ, உடல் உழைப்பால் தம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள ஏற்படுத்தப்பட்டதே அமல அன்னை அன்பகம்.

1986 பெப்ரவரித்திங்கள் 19ம் நாள் யாழ் பழைய பூங்கா வீதியிலுள்ள 124ம் இலக்க இல்லத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது. இருபது பிள்ளைகளோடு ஆரம்பிக்கப்பட்டு தற்போது அறுபது பிள்ளைகளைக் கொண்டுள்ளது.

இவ்வாண்டு பெப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் அன்பகத்துக்காக அரியாலையில் உருவாக்கப்பட்ட புதிய கட்டடம் அரியாலைப் பங்குத் தந்தை பிரான்சிஸ் அ. ம. தி. அடிகளார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அன்பக நிர்வாக குழுத் தலைவர் C. R, ஜோசப் தமதுரையில் காலத்தின் தேவை கருதி ஏற்பட்ட இப் பணியின் வரலாற்றைக் கூறி, மேலும் வளர ஆலோசனைகளையும், ஆசியையும், ஆதரவையும், சபையினரிடம் கோரினர். தொடர்ந்து அருள்திரு. கொன்சால்வெஸ், உப தலைவி சோபியா ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்துப்பேசிய எழுத்தாளர் செம்பியன் செல்வன் உடல் வளர்ச்சியுடன் உள வளர்ச்சியும் வளர ஊக்கத்துடன் நிர்வாகிகள் உழைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வாழ்த்தினர்.

ஈற்றில் செயலாளர் ஜோசப் பாலா அவர்களின் நன்றி உரையோடு, இறை வணக்கத்துடன் விழா முடிவுற்றது.

**தகவல் - மீரா.**

---

# இறைவனுக்கு நன்றி...

1954ம் ஆண்டு முதல் கிறீஸ்து பெருமானில் அன்புகொண்டு அவரது பிள்ளையாக அவாவுற்றேன். இதனை என் பெற்றோரும் சகோதரர்களும் விரும்பவில்லை. ஆயினும் 1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி திருமுழுக்குப் பெற்று கிறீஸ்துவின் பிள்ளையானேன். 1963ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி அருள் திரு. நோபட் அடிகள் எனக்குத் திருமணம் செய்து வைத்தார். இதன் காரணமாக பெற்றோர் சகோதரர்களால் உதவிகள் மறுக்கப்பட்டு கடந்த இருபத்தியைந்து ஆண்டுகளாக நான் பட்ட துன்பங்களை சொல்ல முடியாது. ஆனாலும் எனக்குப் பக்கத் துணையாக இறைவனும், அடுத்து நோபட் அடிகளாரும், டிக்கோணிங் அடிகளாரும் இருந்தார்கள். தேவன் எனது கஷ்டங்கள் சகலத்திலும் இருந்து என்னைக் காப்பாற்றி எனது குடும்பத்தை ஆசிர்வதித்தமைக்கு இறைவனுக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன்.

தேவனின் அடியாள்
புனித யூதாததேயு சேத்திரம்
தேற்றுத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்து வரும்...

நாள் ; 4, 5, 6 - 6 - 88
நேரம் ; காலை 5-50 மணி
' கத்தோலிக்க நற்சிந்தனை '
வழங்குபவர் :
அருள்திரு. அம்புரோஸ் அவர்கள்

★

நாள் : 7 - 6 - 88
நேரம் : மாலை 6 - 45 மணி
' சிறுவர் உலகம் '
( கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி)

★

நாள் : 12 - 6 - 88
நேரம் : மாலை 7-00 மணி
' புதிய உலகம் '
( கத்தோலிக்க நிகழ்ச்சி )

☐ இதயத்திலிருந்து சில எண்ணங்கள்
( சிந்தனை உரை )

☐ பார்த்ததும் படித்ததும்
( பல்சுவை அரங்கம் )

நாள் : 18, 19, 20 - 6 - 88
நேரம் : காலை 5-50 மணி
' கத்தோலிக்க நற்சிந்தனை '
வழங்குபவர் :
அருள் சகோதரி றுவீனு,

★

நாள் : 21 - 6 - 88
நேரம் : மாலை 6-45 மணி
' சிறுவர் உலகம் '
( கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி )

☐ காணாமல் போன யேசு
( வில்லிசை )

★

நாள் : 26 - 6 - 88
நேரம் : மாலை 7-00 மணி
' புதிய உலகம் '
( கத்தோலிக்க நிகழ்ச்சி )

☐ '' சமாரியப் பெண்ணும் யேசுவும் ''
(உரையிடையிட்ட இசைச்சித்திரம் )
எழுதியவர் :
எஸ். ஜெயராஜா.

நிகழ்ச்சி தொகுப்பு; மலர்வேந்தன்

இச் சஞ்சிகை மட்டக்களப்பு புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிடப்பட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 2 - 6 - 1988ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org